

# ஞானச்சுடர்

மார்கழி

மலர் 2007



ௐ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**நன்றென்ற வற்றுள்ளும் நன்றே**
**-முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு**

**பொருள்:** தம்மிலும் அறிவால் மேம்பட்டவர் இருக்கும் சபையில் முன்னே எழுந்து சென்று ஒன்றைச் சொல்லாத அடக்கம்; நன்று என்று சிறப்பித்துச் சொல்லப்படும் குணங்கள் எல்லாவற்றுள்ளும் நன்று. (715)



## நற்சிந்தனை

### அபயப்பத்து


### நீயென்னை ஆளாயோ!

வந்துன் னடியடைந்த மெய்யடியார் வருத்தமெல்லாம்
வெந்துபோம் வண்ணம் மிகுகருணை நீயளித்தி
அந்தமொழி கேட்டு அடியேனு முன்னடிக்கீழ்
வந்தேன் கருணை வழங்காய்நீ வான்பொருளே

### அபயமைந்து

- அருந்தவர் நெஞ்சில் ருசிக்குங் கரும்பே யருளே பெருவாழ்வே
பொருந்திய பூரண சந்த்ரோ தயமே புண்ணியர் புகழ்கோவே
அருந்துயர் தீர்க்கும் மருந்தே அந்தண ராகுதி வெகுமழலே
திருந்திய விலங்கை பொருந்திய திருவே சிவமே யுனக்கபயம்

# என்றும் எங்களுடன்....



நான், எனது என்ற நிலைக்கு அப்பால் எமது பிர தேசம், எமது இனம், எமது மொழி, எமது சமயம் என்ற பரந்த சிந்தனைகளுக்காக உண்மை யாகவும், தூய சிந்தனையுடனும் ஒருவன் செயற்படுகின்றபொழுது தான் அவன் மற்றவர்களால் மதிக்கப்பட்டு அவர்களின் உள் ளங்களில் இடம்பிடிக்கமுடிகிறது.

ஆம்! அமரர் தி. மகேஸ் வரன் அவர்கள் தனது சமுதாய இலட்சியங்களை தன்நலம் கரு தாது தூய சிந்தனையுடன் செயற் படுகின்ற தனித்துவம் உள்ள ஒருவராக இருந்தமையால்தான் அவருடைய திடீர் மறைவு பலருக் கும் தாங்கிக்கொள்ள முடியாத ஒரு இழப்பாக அமைந்துவிட்டது. அமரர் தி. மகேஸ்வரன் அவர்களால் செய்யப்பட்ட உதவிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் காத்திரமானதாக அமைந்துள்ளது. அவர் எமது சமயத்தின்மீது கொண்டிருந்த ஆழமான பற்றும் குறிப்பாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின்மீதும் ஆச்சிரமத்துடனும் கொண்டிருந்த தொடர்புகளும் எமது இதயத்திலிருந்து பிரிக்கமுடியாத அளவுக்கு மிகவும் இறுக்கமானதாக அமைந்திருப்பதை நாம் நன்றியுடன் வெளிப்படுத்துகின்றோம்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பிரமாண்டமான சித்திரத்தேர் 1986ஆம் ஆண்டு அழிக்கப்பட்டு பழைய கட்டுத்தேரில் சந்நிதியான் பவனிவந்த நிலையில் அந்தக் கட்டுத்தேரும் 1999ஆம் ஆண்டில் குடைசாய்ந்தபொழுது இந்து கலாச்சார அமைச்சராக இருந்த மகேஸ்வரன் அவர்கள் உடனடியாகவே 70 இலட்சம் ரூபாவை ஒதுக்கி அடுத்த ஆண்டு புதிய சித்திரத் தேரில் சந்நிதியான் பவனி வருவதற்கான செயற்பாட்டை மேற்கொண்டமை அனைவரும் அறிந்த விடயங்களே.

ஆனால் தான் எதிர்பார்த்ததுபோலவே சந்நிதியான் அடுத்த ஆண்டே புதிய சித்திரத்தேரில் பவனி உலா வருவதை நிறைவேற்றிவிட வேண்டுமென்று சந்நிதியான்மீது கொண்டிருந்த அவரது தூய பக்திதான் உண்மையில் எங்களின் உள்ளங்களையும்


தொடுவதாக அமைந்திருந்தது. ஆம்! அவருக்கு முதல்முறை சூடுபட்டு கழுத்தில் ஏற்பட்ட காயத்தினால் ஆபத்தான நிலையில் அவரது அறிவு மயங்கிச்செல்கின்ற நேரத்தில்கூட தனக்கு தனது பிள்ளைகளைப் பற்றியோ அல்லது மனைவி பற்றியோகூட சிந்தனை வரவில்லை என்றும் புதிய சித்திரத்தேரில் சந்நிதியான் பவனிவருவதை நான் காணமலே இறந்துவிடப்போகின்றேனே என்ற ஆதங்கத்துடனேதான் தனது அறிவு மயங்கியது என்பதை கண்களில் கண்ணீர் ததும்ப எம்மிடம் வெளிப்படுத்தியிருந்தார்கள். இவ்வாறான தூய சிந்தனையுடன் சித்திரத்தேரினை அமைத்தது போலவே சந்நிதியானது பூங்காவன மண்டபத்தையும் இன்று இருக்கும்நிலையில் பிரமாண்டமான முறையில் புனருத்தாரணம் செய்வதற்குத் தேவையான நிதிகளை வழங்கியிருந்தார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை அதன் பல்வேறு வகையான செயற்பாடுகளுக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கிவருகின்றவர்களில் முதன்மையானவராக அமரர் மகேஸ்வரன் அவர்கள் விளங்கிவந்துள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கது. ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் மிகவும் நெருக்கமாக பழகிவருகின்ற ஒருவராகவும் அமரர் மகேஸ்வரன் விளங்கிவந்துள்ளார்கள். அமரர் மகேஸ்வரன் அவர்கள் அமரத்துவம் அடைவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்புகூட இருவரும் தொலைபேசியில் உரையாடி பரஸ்பரம் புதுவருட வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டுள்ளனர். ஆச்சிரமத்தின் தூய்மையான செயற்பாடுகளால் கவரப்பட்ட மகேஸ்வரன் அவர்கள் காரைநகர் சிவன்கோயில் சூழலில் ஒரு அன்னதான மடத்தை ஆரம்பித்து அங்கேயும் ஆச்சிரமத்தைப்போல நித்திய அன்னதானச் செயற்பாட்டை நடாத்திவருவதும் இங்கே நாம் வெளிப்படுத்தப்படவேண்டிய ஒரு அம்சமாகும்.

புனிதமான இடத்தில் புனிதமான சிந்தனையுடன் இருக்கின்றவேளை அமரர் அமரத்துவம் அடைய நேரிட்டதும் ஒரு வித்தியாசமான பண்பாகவே எமக்கு தோன்றுகின்றது. அமரர் மகேஸ்வரன் அவர்கள் இந்து கலாச்சார அமைச்சராக இருந்து சைவ உலகிற்கு ஆற்றிய சேவைகளும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு செய்த தொண்டுகளும் ஆச்சிரமத்துடன் கொண்டிருந்த ஆழமான தொடர்புகளும் அவரை என்றும் எங்களுடன் இருக்கின்ற நிலைக்கு உயர்த்திவிட்டது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சந்நிதியான் ஆச்சிரமம்.**



# ஞானச்சுடர்

வெளியீடு - 2

சுடர் -120

## 2007 மார்கழி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| விஞ்ஞான உலகில் விநாயகர்...... | க. சிவசங்கரநாதன் | 1 - 3 |
| மகிழ்ச்சியான வாழ்வைத் தருவது...... | கா. கணேசதாசன் J.P | 4 - 5 |
| நக்கீரர் அருளிய நன்முருகாற்.......... | பா. சிவனேஸ்வரி | 6 - 8 |
| இந்துமதம் கூறும் ஆத்மீக....... | சி. நற்குணலிங்கம் | 9 - 10 |
| முருகநாமச் சிறப்பு | திருமதி அ. அநுசூயா | 11 - 12 |
| இறைவனையே தக்க வைக்கும்...... | முருகவே பரமநாதன் | 13 - 15 |
| நாமும் பயன்பெறுவோமாக! | திருமதி சி. கனகா | 16 - 18 |
| விரதங்கள் | திருமதி ப. விஜயலட்சுமி | 19 - 21 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவ. மகாலிங்கம் | 22 - 25 |
| முன்னோர் சொன்ன கதைகள் | திருமதி சி. யோகேஸ்வரி | 26 - 27 |
| காளமேகம் கவித்திறன் | வல்வையூர் அப்பாண்ணா | 28 - 30 |
| உள்ளம் படர்ந்த நெறி | இரா. செல்வவடிவேல் | 31 - 33 |
| முத்திதரும் திருவெம்பாவையின்.... | துணைவியூர் கேசவன் | 34 - 36 |
| மங்கையர் நலமோங்கி மானிலம்..... | காரை எம்.பி. அருளானந்தன் | 37 - 38 |
| மேசை ஒரு பாஷை | கே.எஸ். சிவஞானராஜா | 39 - 40 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 41 - 44 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

பதிவு இல. Q.D./44/NEWS/2007

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

# ஞானச்சுடர்
# கார்த்திகைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

119ஆவது சுடருக்கான வெளியீட்டுரையினை ஞானபண்டித சேவாசுரபியும், வைத்தியகலாநிதியுமாகிய சி. கதிரைவேற்பிள்ளை ஐயா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையின் மூலம் ஆச்சிரமத்தினாலும், பேரவையினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சகல பணிகள்பற்றி விதந்துரைத்ததுடன் ஞானச்சுடர் மலர் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்கால சூழ்நிலையிலும் இவ்வாறாக வெளிவந்து கொண்டிருப்பது சந்நிதியானின் திருவருளே என்று கூடியிருந்த அடியார்களுக்கு கூறியதோடு, பலவகையான அறக்கருத்துக்களையும் ஆன்மீகக் கருத்துக்களையும் தாங்கிவரும் ஞானச்சுடர் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவுசெய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

மலருக்கான மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும், பண்டிதருமாகிய சி. வேலாயுதம் அவர்கள் மேற்கொண்டார்கள். பண்டிதர் அவர்கள் தமது மதிப்பீட்டுரைக்கு முன்பாக வெள்ளிக்கிழமைகளில் இப்படியான சமயம் தொடர்பான விழாக்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறுவதால்தான் தாங்களும் சந்நிதி வேலவனது ஆலயத்திற்கு வந்து வேலவனை வணங்குவதற்கு ஆச்சிரமம் ஒரு பாலமாக உள்ளது எனவும், அதனையிட்டு ஆச்சிரமத்திற்கும் பேரவைக்கும் நன்றி கூறினார்கள்.

ஞானச்சுடர் தொடர்ந்து 119 மாதமாக வெளிவந்துகொண்டிருப்பது ஒரு சாதனை என்றும் மலரில் இடம்பெறுகின்ற ஆக்கங்களோடு ஒப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் அதன் பெட்டிச் செய்திகளும் பக்கங்களின் முடிவில் போடப்பட்டுள்ள கருத்தாழமுள்ள பொன்மொழிகளும் போற்றுதற்குரியதெனவும் சுட்டிக்காட்டினார்கள்.

இச்சுடருக்கான ஆக்கத்தினை வழங்குகின்ற அன்பர்களுக்கும் இதனைப் படிக்கின்ற வாசகர்களுக்கும் ஊக்கத்தினையும் நற்கருத்துக்களையும் வழங்குவதாக இம்மலர் விளங்குகின்றது. 2007ஆம் ஆண்டு கார்த்திகைமாத மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் உள்ள ஆழமான கருத்துக்களை அடியார்களுக்கு இரத்தினச்சுருக்கமாக எடுத்துக்கூறி எமது சமயம் தொடர்பான நலிவுகளை நீக்கும் வகையில் ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருப்பதையும் பாராட்டி தனது மதிப்புரையினை நிறைவுசெய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

துர்க்காதேவி துணை

சிவத்தமிழ்ச்செல்வி

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்களின் 83ஆவது பிறந்தநாள்**

**அறக்கொடை விழா– 2008**

*அன்புடையீர்!*

வணக்கம், மேற்படி விழா 23-12-2007 ஞாயிற்றுக்கிழமை மார்கழி மிருகசீரிடத்தோடு ஆரம்பமாகி 07-01-2008 திங்கட்கிழமைவரை விரிவடைகிறது. அம்மையாரின் பிறந்த தினத்தையொட்டி வைப்புச்செய்துள்ள அறக்கொடை நிதியிலிருந்து பெருகின்ற வட்டிப்பணம் இந்நிகழ்வுக்குப் பயன்படுகிறது. அம்மையாரின் அன்பர்களாலும், நண்பர் களாலும் சுண்ணாகம் தேசிய சேமிப்பு வங்கியிலும், யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியிலும் தனிப்பட்ட நிரந்தர வைப்புச் சான்றிதழ் பத்திரங்கள் மூலம் சேமிக்கப்பட்ட தொகை இதுவரை நாற்பத்தைந்து லட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு ரூபா எண்பத்துமூன்று சதமாகும் (4540,836.83). ஆண்டுதோறும் இப்பணம் சிறிது சிறிதாக அதிகரித்து வந்துள்ளது. மேலும் இவ்வாண்டு சுவிஸ் திரு சு. கதிர்காமநாதன் அவர்கள் கல்விநிதியாக 200,000/= வழங்கியுள்ளார். இவ்வருடம் இந்நிதி பின்வரும் ஒழுங்கில் செலவிடப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி விபரம்**

**23-12-2007 ஞாயிற்றுக்கிழமை**

மார்கழி மிருகசீரிடத்தை முன்னிட்ட விஷேட அபிஷேகமும், பூசையும், அன்னக்கொடையும்.

**பிறந்த திகதியில் இடம்பெறும் நிகழ்வுகள்**

07-01-2008 திங்கட்கிழமை முற்பகல் 10.00 - 12.00 மணி

**இடம்:** ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான யாத்திரிகர் விடுதி மண்டபம்.

**அ.** வலிகாம வலய பாடசாலைகளில் சிரேஷ்ட வகுப்பில் (ஆண்டு 11இல்) கல்வி பயிலும் திறமையிலும் வறுமையிலும் மிகுந்த குறிப்பிட்ட மாணவர்கள் 125 பேருக்கு இரண்டாயிரம் ரூபா (2000/=) வீதம் கல்விக்கொடை வழங்கல்.

**ஆ.** தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெறும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு ரூபா ஐம்பதினாயிரம் (50,000/=) வழங்கல்.

**இ.** ஆலய நிர்வாக நிதியிலிருந்து ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (150,000/=) யாழ்ப்பாண போதனாவைத்தியசாலை இருதயநோய் பிரிவுக்கு வழங்கல்.

மேற்படி தினங்களில் அன்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,* சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள்,

*தெல்லிப்பழை.* அறநிதியச்சபை.

உ

# செல்வச் சந்நிதித் திருத்தலம்

## (கட்டளைக் கலிப்பா)

### குகனைக் கும்பிடுவீர்கள்

மயிலை வாகன மாக்கினான் சேவலை
மாண்பின் மிக்க கொடியா யுயர்த்தினான்
அயிலைப் போற்றி யமரர்க் கரசீந்தான்
ஆறுமாமுகன் சந்நிதி யாள்பவன்
பயிலும் கச்சாயாற் கட்டுடை சீரணி
பாவை மார்மல் லாகத் திளவாலை
குயில்கள் குஞ்சரி வள்ளி மணாளனாம்
குகனை யேந்தியே கும்பிடு வீர்களே.

### புகழை நாவினால் போற்றமுடியுமே

கதிர்காமத்தில் கதிர்வேலை யீந்தவன்
கதிர்காமர் தன்னையே பூசிக்க நின்றவன்
சதுநின் வேதம்போல் வாய்கட்டி மோனமாய்
சாதனை செயும் பூசையை ஏற்பவன்
முதிரும் ஆற்றங் கரையி லிருந்தநல்
அருமுனிக் குயர் முத்தி கொடுத்தவன்
புதுமைச் சந்நிதி யான்கதிர் கதிர்காமத்தான்
புகழை நாவினால் போற்ற முடியுமோ!

### ஆச்சிரமத் தொண்டர்

அன்னக் கந்தனைப் போற்றியே அன்றுபோல்
ஆயிரம் மடம் தானே யிருப்பினும்
பின்ன மின்றிப் பெருமனக் கோயிலார்
பிறங்கும் சந்நிதி யாச்சிர மத்தினர்
நன்ன யம்படச் செய்யன்ன தானத்தால்
நாட்டில் நன்மழை பெய்யும் நலத்தினால்
பென்னம் பெரியவத் தொண்டினைச் செய்பவர்
பேர ருள்வன் பெரும்பெயர் முருகனே.

*முதுபெரும்புலவர்,*
*கலாபூஷணம் ஆசிரியர்*
*வை. க. சிற்றம்பலம்.*

உ

# விஞ்ஞான உலகில் விநாயகர் வழிபாடு

திரு க. சிவசங்கரநாதன் அவர்கள்

விநாயகர் உருவினைப் பார்க்கும்போது அத்திருவுருவம் இன்று உலகெங்கும் போற்றப்படும் சுற்றுச்சூழற் பாதுகாப்பில் இன்றியமையாத தேவையினை வலியுறுத்தும் வடிவமாகவே விளங்குகின்றது. மனிதர்களின் நல்வாழ்விற்கு மிருகங்களும் பெரிதும் உதவுகின்றன. ஆகவே, மனிதன் மிருகங்களையும் பறவைகளையும் அவை அழிவுபடாத வகையில் பேணிப்பாதுகாத்தல் வேண்டும். அவற்றிடம் இரக்கமுடையவனாகவும் இருத்தல் வேண்டும். இன்று சர்வதேசத்தில் எல்லா நாடுகளிலும் மிருகங்களையும் பறவைகளையும் பாதுகாப்பதற்கான செயன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிருகங்களில் பெரியதான யானையின் தலையும் மனித உடலும் அழகுற அமைந்தது விநாயகர் மூர்த்தம். மக்களுக்கும் மிருகங்களுக்கும் இடையே தேவையான வாழ்க்கைமுறை ஒருமைப்பாட்டினை உணர்த்தும் பெரிய தத்துவ தெய்வமாகவே விளங்குகின்றது.

மேலும் புலால் மறுத்தலின் தேவையினையும் சைவ உணவின் மேன்மையினையும் யானைமுகம் குறிப்பால் உணர்த்துவதாகவும் உள்ளது. மிருகங்களில் யானை கம்பீரத் தோற்றமுடையது. அயராத உழைப்பு, திடபலம், அறிவு முதலியன அமையப் பெற்றது. இத்தகைய மேன்மைகளுடன் அளவிடற்கரிய சக்தியின் அரிய உருவமாக விளங்கும் யானை உண்பது தாவர உணவினைத்தான். அந்த யானையின் பிளிறுதலில் ஓம் என்ற பிரணவ மந்திரத்தினையும் கேட்கலாம். இவ்வகையில் மக்களுக்கும் மிருகங்களுக்கும் தாவரங்களுக்கும் இடையே தேவையான வாழ்முறைக் கட்டுப்பாடும் ஒருமைப்பாடும் இருத்தல் வேண்டும் என்ற விஞ்ஞானக் கோட்பாட்டினை உணர்த்தும் மூர்த்தமாகவும் விநாயகர் விளங்குகிறார்.

பண்டைக்காலம் முதல் விநாயக வழிபாடு முதலிடம் வகிக்கின்றது. சமய வழிபாட்டில் இது முதன்மையாக உள்ளது. விநாயகர் ஆலயம் அல்லாது சிவன் ஆலயம், அம்மன் ஆலயம், விஷ்ணு ஆலயம் சரி, இன்று விநாயகர் பூசையின் பின் பூசைகள் நடைபெறுகின்றன. ஓங்கார வடிவம் விநாயகரின் திருவுருவம் ஒருமைப் பாட்டின் தெய்வீக உருவம். ஓங்காரம் எல்லா எழுத்தொலிகளுக்கும் முதலாய் அமைந்தது. அஃது அகத்தும் புறத்தும் இயற்கையாய் ஒலிக்கும் ஓசை ஓங்காரம். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் இயற்ற வல்லது. எச் செயலையும் தடைகள் இல்லாமல் வெற்றியுடன் முடிப்பதற்கு அச்செயலை தொடங்கு வதற்கு முதற்கண் வழிபடப்பெறும் கடவுள் ஒருமைப்பாட்டு உருவினரான விநாயகரே.

ஒருமைப்பாடு எங்கும் எதிலும் வேண்டும். வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அது வியாபித்திருக்க வேண்டும். ஆணின்றிப் பெண்ணில்லை. பெண்ணின்றி ஆணில்லை. சக்தியும் சிவமுமாந் தன்மை இவ்வுலகமெல்லாம் என்கின்றது சிவஞான சித்தியார். விநாயகமூர்த்தம் இதனை அழகுற வெளிப்படுத்துகிறது. அதில் தந்தமுள்ள பகுதி ஆண்கூறு தந்தமில்லாத பகுதி பெண்கூறு இவ்வாறு விநாயகமூர்த்தத்தில் ஆண்

பெண் என்ற இருகூறுகள் பாற்பாகுபாட்டினைக்கடந்து ஒருங்கிணைந்து செயற்படுதல் ஆண் பெண் ஒருமைப்பாட்டின் இன்றியமையாத் தன்மையை வலியுறுத்தி விளங்குகிறது. உலகில் நிகழும் எல்லாச் செயல்களும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்துபெருந் தொழில்களில் அடங்கும் விநாயகரின் ஐந்து கரங்களில் அமைந்துள்ள ஐந்து பொருள்களும் இந்த ஐந்து தொழில்களை உணர்த்துவதாகவே உள்ளன.

ஒரு கரத்தில் ஏந்தியுள்ள பாசம் படைத்தல் தொழிலைப் புலப்படுத்தும். பாசம் பிறவிக்கு வழிகோலுகின்றது அல்லவா. அபயகரம் காத்தல் தொழிலைக் காட்டும். அங்குசம் அழித்தல் தொழிலைக் காட்டும். துதிக்கை மறைத்தலைக் குறிக்கும். மோதகம் அருளல் தொழிலை அறிவிக்கும். ஐந்தொழில்களையும் அளவோடு ஒருங்கிணைந்த வகையில் செயற்படுத்தும் அழகிய ஞானமூர்த்தமே ஐங்கரத்து விநாயகர். விநாயக மூர்த்தம் ஞானசொரூபம். அது பரஞானம் அபரஞானம் ஆகிய இரண்டினையும் குறிக்கும் குறிகளைக்கொண்ட அழகிய மூர்த்தம். அதனுடைய ஒடிந்த கொம்பு அபர ஞானத்தைக் குறிக்கும். ஒடியாத முழுமையான கொம்பு பரஞானத்தைக் குறிக்கும். பாச ஞான நூலான பாரதம் எழுதத் துணை செய்தது ஒடிக்கப்பெற்ற கொம்பு பாச ஞானம். பசுஞானம் அகலும்போது சிவஞானத்திற்கு வழிகோலும் உவமையில்லாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம் திருப்பெருகு சிவஞானம் என்ற மும்மதத்தினை யும் ஒருங்கிணைந்த ஞானமதத்தின் ஒப்பற்ற தலைவராக விநாயகக் கடவுள் விளங்குகின்றார்.

சைவர்க்கும் வைணவர்க்கும் வழிபடு கடவுளாக விளங்குபவர் விநாயகர். மேலும் விநாயக மூர்த்தம் ஒன்றை வழிபட்டால் போதும். சிவன், சக்தி, விஷ்ணு ஆகிய பெருந்தெய்வங்களை வழிபட்ட பலன் கிட்டும். ஏனெனில் அத்தெய்வங்களின் அம்சங்கள் விநாயகர் திருவுருவில் அமைந்துள்ளமையாலாம். விநாயகரின் நாபி பிரம்ம சொருபமாக விளங்குகின்றது. திருமுகம் திருமாலின் அம்சம். இடதுபாகம் சக்தி வடிவம், வலது பாகம் சூரிய அம்சம். ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் வகுத்த ஆறு சமயங்களிலும் விநாயகர் வழிபாடு உண்டு.

வெள்ளெருக்கு முதல் கருங்கல்வரை பேதமின்றிப் பலபொருள்களைக் கொண்டும் விநாயகர் வடிவம் செய்து வழிபடலாம். காலம் இடமெல்லாம் கடந்து நிற்பவர் கணபதி. ஓங்காரம் அநாதி அதற்குக் காலம் கற்பித்தல் முடியாது. ஆகையால் ஓங்கார வடிவினரான விநாயகரும் அநாதியாய்ப் பல காலங்களையும் பிணைத்து நிற்பதை வேதங்களும் புராணங்களும் தெரிவிக்கின்றன. வேதகாலத்திலேயே விநாயகர் வழிபாடு இருந்திருக்கிறது என்பது தெரிகிறது. காலத்தினால் மட்டுமன்றி இடத்தினைப் பொறுத்தளவிலும் ஒருமைப்பாட்டினை வளர்க்கும் ஒப்பற்ற தெய்வமாக வியாபித்து நிற்கிறார்.

சதுர்த்தி விரதம் முக்கிய இடம்பெறுகிறது. ஆவணிமாதச் சதுர்த்தி வெகு சிறப்பாகத் தமிழகத்தில் மகாராஷ்டிரத்தில் விநாயகருக்குச் சிறப்பாகக் கொண்டாடுவர். விநாயகரை நினைத்து வெள்ளிக்கிழமையும் விரதமிருப்பது நல்லது. பன்னிரு மாதமும் வளர்பிறைச் சதுர்த்தியையும் தேய்பிறைச் சதுர்த்தியையும் மக்கள் விரதமாக

**நீயே செய்யக்கூடியதற்குப் பிறரை ஏவல் கொள்ளாதே.**

அனுட்டிப்பதும் உண்டு. கார்த்திகைமாத கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள்முதல் இருபத்தொரு தினங்கள் விநாயக விரதமாக மிகச்சிறப்பாக விரதம், பூசை, புராணப் படிப்புப் பிள்ளையார் கதைப் படிப்பு ஆகியன எல்லாம் சேர்த்து நியம நிஷ்டைகளுடன் அநேகர் விநாயகரைப் போற்றித் துதித்து வணங்குகின்றார்கள். ஔவையார் இராவணன் வழிபட்டுப் பலன்பெற்றதையும் நூல்களில் முதற்காப்பு விநாயகருக்கே உரித்தானதையும் காணலாம். இங்ஙனமாக விநாயக வழிபாடு சிறப்புப்பெறுகிறது.

(தொடர்ச்சி...

**2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| சிவபாதம் ரமணன் சிவன்கோவிலடி | பருத்தித்துறை | 2000. 00 |
| T. தியாகராசா P.M | திருகோணமலை | 2000. 00 |
| சோ. மோகனதாஸ் | மல்லாகம் | 500. 00 |
| நா. தவமணிநாயகம் | மல்லாகம் | 500. 00 |
| இ. தவராசா | மீசாலை | 1000. 00 |
| பகீரதன் யசோதா ஞானேஸ்வரி குடும்பம் | | 1950. 00 |
| செல்வி இராமலிங்கம் சகோதரிகள் | பிரப்பங்குளலேன் | 10000. 00 |
| சசிதரன் வள்ளுவன் | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| சி. சிவானந்தம் குடும்பம் பிரப்பங்குளலேன் (யாழ்) | கனடா | 5000. 00 |
| நடராசா புஸ்பகந்தராசா குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| சி. கருணானந்தன் பிரப்பங்குளலேன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ச. பாலகிருஸ்ணன் யோகேந்திரன் | | 1000. 00 |
| திருமதி கு. சண்முகதாஸ் தலையாழி | கொக்குவில் | 1000. 00 |
| வள்ளுவன் | வரணி | 1000. 00 |
| முருகையா இராசமலர் | அளவெட்டி | 1மூடை அரிசி |
| கு. சுரேந்திரன் | சிறுப்பிட்டி | 4000. 00 |
| சுவர்ணா கபிலன் | நல்லூர் | 1300. 00 |
| திருமதி சோ. பத்மலோஜினி | நவாலி கிழக்கு | 2000. 00 |
| க. முத்துவேலு பண்டிதர் இமையாணன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| உதயகுமார் யோகதர்ஷினி சாயி இல்லம் | உடுப்பிட்டி | 2000. 00 |
| சபாலிங்கம் குடும்பம் | உரும்பராய் | 3000. 00 |
| த. ஆனந்தராசா லிங்கவாசா | கரவெட்டி | 5000. 00 |
| Dr. நிவேஷா உதயகுமாரன் | சிங்கப்பூர் | 3000. 00 |
| பு. கஜன் மக்கள் வங்கி | நெல்லியடி | 500. 00 |
| N. நவநீதன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| கந்தையா காசிராசா | குப்பிளான் | 5000. 00 |
| ஆ. சுப்பிரமணியம் | கரவெட்டி | 80k அரிசி |
| கி. நித்தியானந்தம் | நகுலேஸ்வரா வீதி | 1000. 00 |

(தொடரும்....

இன்று செய்யக்கூடியதை நாளைக்கெனப் பின் போடாதே.

# மகிழ்ச்சியான வாழ்வைத் தருவது அமைதியே!

**திரு கா. கணேசதாசன் JP அவர்கள்**

ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், செல்வச்செழிப்பாகவும் வாழவேண்டும் என்றே விரும்புகின்றனர். இது மனித இயல்பு. செல்வமும், ஆரோக்கியமும் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருப்பதுபோலத் தோன்றினாலும் முற்றுமுழுதாக அப்படி நினைப்பது சரியானது அல்ல என்ற கூற்றும் பொருந்தக்கூடியது. ஏனென்றால் ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கின்றார் என்றால் அவர் ஆரோக்கியமாகவும், செல்வந்தராகவும் இருக்கின்றார் என்பது அல்ல. மாறாக ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி ஆகிய மூன்று செல்வங்களும் உடையவராக ஒருவர் இருக்கின்றார் என்று கூறினால் மட்டும் போதுமானது. மற்ற இரண்டு செல்வங்களும் அவரிடம் உள்ளன என்பது அதில் அடங்கிவிடுகின்றது. ஆனால், அதில் முக்கியமாகக் கருத்திற் கொள்ளவேண்டிய அம்சம் ஒன்று உண்டு. அதாவது மகிழ்ச்சி என்பது அமைதியோடு நெருங்கிய சம்பந்தம் உடையதாக இருக்கின்றது என்பதுதான். ஏனெனில் அமைதியாரிடம் உள்ளதோ அவர்தான் மகிழ்ச்சியோடு இருக்கமுடியும் ஆதலால், மகிழ்ச்சிக்கு ஆதாரம் அமைதியே அன்றி மற்றச் செல்வங்கள் அல்ல.

பௌதீகமான பொருள் எதுவும் மகிழ்ச்சிக்கு நிரந்தர ஆதாரமாக விளங்காது. அமைதியாய் இருக்கின்றது, மகிழ்ச்சியாய் இருக்கின்றது என்று நாம் உணர்வது மனிதனைப் பொறுத்ததாகவே இருக்கின்றது. உதாரணமாக- புத்தகத்தில் ஏதோ ஒரு கதையைப் படித்துக்கொண்டிருக்கிறோம். அப்போது கதையைப் பொறுத்து மனத்தில் அமைதியையோ, மகிழ்ச்சியையோ, அனுதாபத்தையோ அனுபவம் ஆவதை உணர்கிறோம். ஆகவே, அமைதியின் அனுபவம் வெளியில் அல்ல என்பது தெளிவாகின்றது. மகிழ்ச்சியோடு இருக்க விரும்புகின்றோம். அதற்கான அத்திவாரத்தை அமைப்பதற்கு முன்பாக முதலில் மனம் அமைதியில் இருப்பது அவசியமாகின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு மனத்தை அமைதியாக வைத்துக்கொள்கிறோமோ அந்த அளவிற்கு எம்மில் அமைதியானது இயற்கையானதாகவும், இயல்பானதாகவும் ஆகிக்கொண்டேயிருக்கும். இன்று பலரும் இந்த அமைதியை உலகில் எல்லா இடங்களிலும் எல்லாத் திசைகளிலும் தேடுகின்றனர். இருந்தும் அந்த அமைதி கிடைக்கவே இல்லை. அமைதியை வேண்டி அமைதிப் புறாவைப் பறக்கவும் விட்டார்கள். ஆனால் அமைதி கிடைத்ததா? அமைதிப் புறாவுடன் சேர்ந்த அமைதியும் பறந்துவிட்டதோ என்னவோ என்றும் நினைக்கத் தோன்றுகின்றது.

நாம் அமைதியைத் தேடுகின்றோம் என்றால் அதன் அர்த்தம் நாம் அதைத் தொலைத்துவிட்டோம் என்பதல்லவா? அதாவது நாம் வைத்திருந்த அல்லது அனுபவித்த ஒரு பொருளை நாம் இழந்தவுடனேயே அதைத் தேட ஆரம்பிக்கின்றோம். இது போலவே அமைதியும்கூட நாம் அனுபவித்த ஒன்றே. ஆனால், அதை நாம் அனைவரும் பல காரணங்களால் தற்பொழுது இழந்துவிட்டோம். ஆகவேதான் இன்று நாம் அனைவருமே அந்த அமைதியைத் தேடிக்கொண்டேயிருக்கின்றோம். ஆனாலும், நாம் எங்கு தொலைத்தோமோ அந்த இடத்தில் தேடினாலேயே அதை மீண்டும் எம்மாற்

பெற்றுக்கொள்ள முடியும். ஒரு கதைகூட உள்ளது. ஒரு இராஜகுமாரி தன்னுடைய வைர அட்டியலைத் தொலைத்துவிட்டாள். அவள் அதனை எல்லா இடங்களிலும் தேடினாள். அத்துடன் முழு இராச்சியமுமே அந்த வைர அட்டியலைத் தேடியது. இருந்தும் கூட அந்த வைர அட்டியல் அவளுக்குக் கிடைக்கவில்லை. பின் அவள் ஒரு நாள், தன்னுடைய கண்ணாடியின் முன்நின்று பார்த்தபோது அந்த வைர அட்டியலானது தன் கழுத்திலேயே இருப்பதைக் கண்டாள். இதுபோன்றுதான் நாமும் இந்த அமைதியைத் தொலைத்துவிட்டு வெளியே அதனைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு தேடினால் அமைதி எமக்குக் கிடைத்து விடுமா? இல்லை அல்லவா.

நாம் தேடிக்கொண்டிருக்கும் அந்த அமைதி ஆத்மாக்களாகிய எம்முள் ஆழமாகப் புதைந்து இருக்கின்றது. அதாவது காமம், கோபம், பற்று, பேராசை, ஆணவம், பொறாமை ஆகிய அசுர குணங்கள் எமக்குள் இருக்கவேண்டிய அமைதி, அன்பு, சந்தோஷம் போன்ற ஆத்மாவின் தெய்வீகக் குணங்களனைத்தையும் ஆழத்திற் புதைந்துவிட்டன. ஆகவே, இப்போது நாம் இவற்றை வெளியிலே தேடுவதில் பிரயோசனம் கிடையாது. ஆகவே, எம்முள் இருக்கும் அமைதியை வெளிக்கொண்டுவருவது தான் அமைதியைப் பெறுவதற்கான சிறந்த ஒரு வழியாகும். முதலாவதாக நாம் இந்த உடல் அல்ல, நாம் என்றென்றும் அழிவில்லாத அமைதியான ஆத்மா என்ற உண்மையான ஞானத்தைப் புரிந்து அந்த ஞானத்தை எம் விழிப்புணர்வில் வைத்து ஆத்மாக்களின் தந்தையாகிய பரமாத்மா என்று அழைக்கப்படும் இறைவன்பால் எம் மனத்தையும் புத்தியையும் நிலைநிறுத்தி அவரை நினைவுசெய்தல் வேண்டும். இந்த நினைவின் மூலமாக மட்டுமே ஆத்மா (மனிதன்) அமைதியாலும், ஆனந்தத்தாலும் அலங்கரிக்கப்படுகின்றது. இந்த அமைதியின் அலைக்கதிர்கள் இந்தச் சூழலைச் சென்றடைவதனால் நாம் வாழும் சூழலே அமைதியான சூழலாக மாறிவிடும். அப்போது மகிழ்ச்சி என்ற மாபெரும் கிடைத்தற்கரிய செல்வம் நம் வாழ்விற் குடிகொண்டுவிடும்.

## முத்திக்கு வழிகள்

### சைவ நாற்பாதங்கள்

சரியை கிரியை யோகம் ஞானம்
சாதனம் நான்கும் வாய்த்த வழிகள்
அரிய ஆன்மீ கவாழ்வு அரும்பி
பெரிய காயாய் கனிந்து நிறைவுற
குரவர் நால்வர் கொண்ட மார்க்கம்
குறித்த அவைதான் ஒவ்வொன் றாகும்
பரமுத் திபெற்று பேரின் பத்தை
பாரோர் அடையப் பாதைகள் இவையே.

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்.*

**மற்றவர்க்கு உதவி புரிவதையும் சிந்தித்தே செய்.**

# நக்கீரர் அருளிய நன்முருகாற்றுப்படை - சுவாமிமலை

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

நாலாவது படைவீடாக நக்கீரரால் பாடப்பெற்றது திருவேரகம். சோழநாட்டுத் தலங்களுள் சிறப்புடன் விளங்குவது. காவிரிக் கரையில் அமைந்துள்ள இப்படைவீடு சுவாமியாகிய தந்தைக்கு தநயனாகிய முருகப்பெருமான் பிரணவப்பொருளைக் குருவாக இருந்து உபதேசித்தபடியால் சுவாமிமலை என அழைக்கப்படுகிறது. குருமலை என்றும் அழைப்பர். முருகனுக்கும் தகப்பன்சாமி என்ற பெயர் வந்தது. சிவபெருமான் சீடராகவும், முருகன் குருவாகவும் விளங்கியதை உலக மக்களுக்கு உணர்த்தக்கருதியே சுவாமிமலை ஆலயத்தில் சிவபெருமான் சந்நிதி மலையின் கீழ்ப்பாகத்திலும், முருகன் சந்நிதி மலையின் மேற்பாகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இயற்கை அழகு கொஞ்சும் சூழலில் மூன்று கோபுரங்களுடனும், மூன்று பிரகாரங்களுடனும் கோயில் அமைந்துள்ளது. மலை உச்சியை அடைவதற்கு அறுபது படிகள் ஏறிச்செல்ல வேண்டும். இந்த அறுபது படிகளும் அறுபது தமிழ் வருடங்களின் அதிதேவதைகளைக் குறிப்பதாக ஐதிகம்.

கயிலையங்கிரியில் ஒரு திருவிளையாடல் நடைபெற்றது. ஞாலத்தைப் படைக்கும் நான்முகனுக்கும், ஞானக்குழந்தையாகிய முருகனுக்குமிடையில் சச்சரவு ஏற்பட்டது. கயிலையங்கிரிக்குவரும் தேவர்கள் எல்லோரும் உமாதேவியாரையும் சிவபெருமானையும் வழிபட்டபின் முருகனையும் போற்றி வணங்கிச் செல்வர். அகிலத்தைப் படைப்பவன் என்ற அகந்தையினால் நான்முகன் அங்கே விளையாடிக் கொண்டிருந்த பாலமுருகனைச் சிறுவன் என நினைத்து வணங்காமலே சென்றான். அவனது அகந்தையைப் போக்க எண்ணிய ஆறுமுகப்பரம்பொருள் அவனை அழைத்து, பிரணவப் பொருளுக்கு உரைகேட்கிறான். 'ஓம்' என்னும் பிரணவத்திற்குப் பொருள் கூறமுடியாது திகைக்கிறான் நான்முகன். பிரணவத்தின் பொருள் தெரியாது எப்படிப் படைத்தல் தொழில் செய்யமுடியும்? எனக்கூறி அவனது சிரசிலே குட்டி, அவனைச் சிறையிலே தள்ளிவிடுகிறார். பின்பு முருகன் தானே ஒரு திருமுகத்துடனும், நான்கு திருக்கரங்களுடனும் சிருஷ்டித் தொழிலைச் செய்கிறார். இதனை அறிந்த சிவபிரான் முருகனிடம் பிரமனைச் சிறைவைத்த காரணம் கேட்கிறார். பிரணவத்தின் பொருள் தெரியாத பிரமன் எப்படிச் சிருஷ்டித்தொழில் புரியமுடியும் என்கிறார் முருகன். வேதங்களை ஓதிக்கொண்டிருக்கும் பிரமனுக்கே தெரியாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? என்று பரமசிவன் கேட்கிறார். தெரியும் என்கிறார் கந்தவேள். "சொல் பார்க்கலாம்" என்று தந்தையார் கேட்க; இரு என இருந்து, சொல் எனச் சொல்லி, போ எனப் போகின்ற சீடனாகி என்னிடம் கேட்டால் சொல்லுவேன் என்றார் குமரன். அப்படியே நின்று சிவபிரான் கேட்கவே பிரணவப்பொருள் உபதேசம் நடக்கிறது. சங்கரன் செவியில் உமைபாலன் சாற்றும் உபதேசம் ஓம் நாதம். சிவனார் மனங்குளிர உபதேச மந்திரம் பகர்ந்தான் குருநாதன். இப்படிச் சாமிக்கும் நாதனாக அமைந்த சாமிநாதன் குருமூர்த்தியாக, ஞானபண்டிதனாக இருக்கின்ற காட்சியைச் சுவாமி மலையில் காணலாம். முருகப்பெருமான் கையிலே தண்டமேந்தி, வரத ஹஸ்தத்துடனும்,

மற்றொருகை இடது தொடையிலும் அமர்ந்து இருக்கும் அழகு பொழியும் கருணைமுகம் பார்க்கப் பரவசமாகும்.

சிவபெருமான் ஞானோபதேசம் பெற்ற சுவாமிமலையின் சிறப்பைக் கூறவந்த நக்கீரர், முதலில் அங்கே முருகனை வழிபடும் செம்மைமிக்க அந்தணர்களின் ஒழுக்க நெறியை விளக்குகிறார். எவ்வுயிர்க்கும் செந்தன்மை பூண்டொழுகும் செம்மை சான்ற அடியார்கள் பிராமணர்கள். அவர்கள் ஓதுதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேள்வி செய்தல், செய்வித்தல் ஆகிய ஆறு தொழில்களை ஆற்றுபவர்கள். அந்தணர்கள் தலைமுறை தலைமுறையாக ஒழுக்கத்தையே சொத்தாகவுடைய நன்கு மதிக்கப்பட்ட குடிகளிலே தோன்றியவர்கள். 48 ஆண்டுகள் பிரமச்சரிய விரதம் பூண்ட பெருமதிப்புக் குரியவர்கள். பின்பு இல்லறம் என்னும் நல்லறத்தை மேற்கொண்டு வாழ்பவர்கள். தர்மத்தையே சொல்லும் விரதம் பூண்டவர்கள். அவர்கள் நாற்சதுரம், முச்சதுரம், வில்வடிவம் ஆகிய மூன்று வடிவினதாய் ஓம குண்டங்களை அமைத்து ஆகவனீயம், தக்கினாக்கினி, காருகபத்தியம் என்ற மூன்று அக்கினிகளை ஓம்பும் இயல்புடையவர்கள். உலகம் வளம்பெற்றுவாழ இந்த அக்கினி காரியம் வேண்டற்பாலது. இவர்களை இரு பிறப்பாளர்கள் என நக்கீரர் கூறுகிறார். பூணூற் சடங்குக்குமுன் ஒரு பிறப்பும், அதன் பின் மற்றொரு பிறப்பும் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் மூன்று முப்புரிநூல்களை அணிந்திருக்கிறார்கள். அதிகாலையில் எழுந்து நீராடி, ஈர ஆடையுடன் தலைமேற் குவித்த கையினராய் அந்தண அடியார்கள் "ஓம் சரவணபவ" என்ற முருகனுடைய சடாட்சர மந்திரத்தை ஒலி பிறழாமல் உச்சரித்துக்கொண்டு, வாசனை மிகுந்த தேன் பிலிற்றும் மலர்களை ஏந்திய கையினராய்ப் பெருமானின் திருவடிகளையே தம் உள்ளத்திற் கொண்டவர்களாய் மலர்தூவிப் போற்றிப் பணிவார்கள். இவ்வழிபாட்டுக்கு மகிழ்ந்து முருகன் திருவேரகத்தில் எழுந்தருளுவான் என்று கூறுகிறார்.

திருவேரகம் முருகன் குருவாய் வந்து அமர்ந்து யோகத்திலிருந்து தந்தை மனங்குளிர உபதேசம் செய்த தலம். ஞான போதனர்கள் சேரும் தலம். அறு தொழில் உடையோராய், பிரமச்சரியம் காத்தோராய், முத்திபோற்றுவோராய், இரு பிறப்பாளராய், பூணூல் மடியினராய் விளங்குகின்ற அந்தண அடியார்கள் வழிபாடு செய்யும் தலம். இவ்வழிபாட்டுக்கு மகிழ்ந்து சுவாமிநாதன் தன்னை நாடிவரும் பக்தர்கள் அனைவருக்கும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு அருளுகின்றான்.

வினைதீர்க்கும் வெற்றிவடிவேலன் அருள் தரும் முருகன் அருளாளன். கருணைப் பெருங்கடல், அறியாமை இருளகற்றி மெய்ஞ்ஞான ஒளிதரும் ஞானமூர்த்தி. பேராற்றலும், பேரழகும், பேரறிவும் தானேயாகித் திகழ்கின்ற தயாபரன். ஆதிபரம்பொருளாம் அப்பனுக்கே உபதேசம் செய்த சிவகுருநாதன். வீரத்திருக்குமரன். அவன் திருவருள் ஊழையும் மாற்றவல்லது. பிரமன் கையால் எழுதிய தலைவிதியை முருகன் காலால் அழிப்பான்.

சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானே! ஆன்மாக்கள் ஒடுங்கு மிடமாகிய தேவரீருடைய திருவடிகளை அரைநிமிட நேரமாயினும் புலன்களை அடக்கித் தவமுறை தியானம் செய்ய அறியாதவனும் அறிவிலியும் குற்றமுடையவனும் மூடனும் மட்டியும் தீவினையால் பிறந்து பிறந்து உழல்பவனும் ஆகிய அடியேன் அருட்செல்வ மில்லாத வறுமையால் மயக்கமடைந்து துன்புறுவது முறையோ? எல்லையில்லாப்

**ஒவ்வொன்றையும் நினை ஆனால் அந்த ஒன்றாகிவிடாதே.**

பேரின்பத்தையும், மிகுந்த செல்வத்துடன் கூடிய பெருவாழ்வையும், நல்ல தகுதியையும், பதிஞானத்தையும், மரணமில்லாப் பெருவாழ்வாம் மோட்சநிலையையும் அடியேனுக்குக் கொடுத்துத் துணைபுரிந்து காத்தருளவேண்டுமென அருணகிரிநாதர் வேண்டுவது போன்று நாமும் ஞானமூர்த்தியாகிய சுவாமிநாதனுடைய திருவடிகளைப் போற்றிப் பணிந்து பேரின்பப் பெருவாழ்வு பெறவேண்டும். முருகன் குருவாக அமர்ந்து சிவபெருமானுக்கு உபதேசம் செய்ததை,

நாதா; குமரா நம வென்றரனார்
ஓதா யென வோதிய தெப்பொருள் தான்
வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்
பாதா குறமின் பத சேகரனே.

என்று கந்தர் அநுபூதியில் குமரா! தந்தைக்கு உபதேசித்தது எத்தகைய பொருள், அதையே அடியேனுக்கும் உபதேசித்தருள்வீராக! என்று முருகனிடம் வேண்டுகிறார். நாமும் அந்தச் சுவாமிநாதனை அனுதினமும் போற்றிப் பணிந்து அவன் திருவருள் பெறுவோமாக.

(தொடரும்....

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| P. தம்பிராசா (அவுஸ்திரேலியா) | நீர்வேலி தெற்கு | 5000. 00 |
| மு. ஸ்கந்தராசா | இடைக்காடு | 4000. 00 |
| திருமதி நேசரெத்தினம் | லண்டன் | 5000. 00 |
| திருமதி பாலேந்திரா | கொழும்பு | 1000. 00 |
| திருமதி கலைமதி மித்திரன் (கனடா) | மந்துவில் | 3000. 00 |
| நடராசா பேசிராணி | அச்சுவேலி வடக்கு | 3000. 00 |
| திருமதி முத்துகிருஸ்ணன் | உரும்பராய் தெற்கு | 1000. 00 |
| மதனசுந்தரம் ஸ்ரீதரன் | வல்வெட்டித்துறை (லண்டன்) | 15000. 00 |
| க. கமலக்கண்ணன் கொம்மந்தரை | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| N. நவரெட்னராஜா உபதபாலதிபர் | இளவாலை | 1மூடை அரிசி |
| செல்லமுத்து புடவை மாளிகை | நெல்லியடி | 8000. 00 |
| கண்டி பற்றிக் சென்ரர் (செல்லமுத்து மூலம்) | | 8000. 00 |
| சி. இராசேந்திரம் | புலோலி தெற்கு | 3000. 00 |
| திரு செல்வராசா | மல்லாகம் | 2000. 00 |
| திரு இந்திரராசா | மல்லாகம் | 2000. 00 |
| த. சிவகுமாரன் | இணுவில் | 4000. 00 |
| திரு கனகலிங்கம் | சுண்ணாகம் | 1மூடை அரிசி |
| திருமதி கௌரி சுரேசன் | ஆவரங்கால் | 2000. 00 |
| நவரெட்னம் செங்கோடன் | மீசாலை | 3000. 00 |

(தொடரும்...

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

உ

# இந்துமதம் கூறும் ஆத்மீக விடுதலை மார்க்கங்கள்

திரு சி. நற்குணலிங்கம் (B.A) அவர்கள்

இறைவனைப் போற்றி நிற்கும் மதங்கள் இறைவனை அடைதல் முத்தி என்று கூறப்படும். மேலும் விடுதலை என்பது பந்தம், பாசம் எனச்சுட்டப்பெறும் அஞ்ஞான நிலையிலிருந்து விடுதலை பெறுதலைக் குறிக்கின்றது. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்திப்பேறு பெறும் பொருட்டே" என்பர் நாவலர். எனவே சைவசித்தாந்தத்தின் உயரிய இலட்சியமே ஆன்மீக விடுதலையேயாகும்.

சைவசித்தாந்த நூல்கள் வாயிலாக விடுதலைக்கான வழிகளை நோக்குமிடத்தும், இந் நூல்கள் விடுதலைக்கான வழிகளை மிகச்சிறப்பாகக் கூறுகின்றன. தீட்சைமூலம், சிவசின்னங்களை அணிவதன்மூலம், பஞ்சாட்சர ஜெபமூலம், குருலிங்க சங்கம வழிபாட்டின் மூலம், நாற்பாதங்கள் மூலம், சிவாலயத் தொண்டுகள் மூலம், குருவின் வழிகாட்டல் மூலம், நல்வினை செய்வதன்மூலம், மும்மலங்களை நீக்குவதன்மூலம் நாம் ஆத்மீக விடுதலையினை அடையலாமென சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

ஆத்மீக விடுதலை மார்க்கங்களிலொன்று தீட்சைபெறுதல். பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது தீட்சை எனப்படும். சாதாரம், நிராதாரம் எனத் தீட்சை இரு வகைப்படும். விஞ்ஞானகலர், பிரளயாகலர்க்கு முன்னின்று செய்வது நிராதாரம் எனவும், தாமே செய்யாது குருவின்மூலம் செய்யும் தீட்சை சாதாரம் எனவும் அழைக்கப் படுகின்றது. சாதார தீட்சை ஏழு வகைப்படும். அவையாவன, நயனம், பரிசம், மானசம், வாசகம், சாத்திரம், யோகம், ஔத்திரி என்பனவாகும். உதாரணமாக சுந்தரருக்கு முதிய வேதியர் வடிவில் நயனதீட்சை வழங்கப்பட்டது. கந்தபுராணத்தில் தீட்சைபற்றிய கருத்துக்களும் சொல்லப்பட்டுள்ளன.

சிவசின்னங்களை அணிவதன்மூலமும் விடுதலை அடையலாம். விபூதி, திருவைந் தெழுத்து, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்களாகும். விபூதி மேலான செல்வத்தைக் கொடுப்பதாகும். விபூதியின் மகிமைக்கு சம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் சான்றாகும். உருத்திராக்கம் என்பது ஆன்மாக்கள் படும் துன்பங்களைப் பார்த்து இரக்கமடையும் இறைவனின் கண்ணீர்த்துளிகளாகும்.

'நான் வீபூதியை அழிக்கமாட்டேன், உருத்திராக்கத்தைக் கழற்றமாட்டேன்' என்ற நாவலர் கூற்றிலிருந்து இதன் பெருமையை அறியமுடிகின்றது. ஐந்தெழுத்தானது பிறவிப்பிணியிலிருந்து ஆன்மாக்களை விடுதலையடைய உதவுகின்றது. அப்பரது வரலாறு இதற்குச் சான்றாகும். "சொற்றுணை வேதியன்... நாமம் நமச்சிவாயவே" என்ற அடிமூலம் இதனை விளக்கலாம். ஐந்தெழுத்தின் மாண்பினைத் திருவருட் பயனிலும் காணலாம்.

குருலிங்கசங்கம வழிபாட்டின்மூலமும் முத்தியடையலாம். பெரியபுராணத்தில் இதுபற்றிச் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. குருவை வழிபட்டு முத்தியடைந்தோர் பன்னிருவர். இலிங்கத்தை வழிபட்டு முத்தியடைந்தோர் முப்பதின்மர். சிவனடியாரை வழிபட்டு முத்தியடைந்தோர் பத்தொன்பதுபேர் என்று சொல்லப்பட்டுள்ளது. மணிவாசகர் தன்னைச் சிவனடியார்களது கூட்டத்துடன் சேர்த்துவிடுமாறு இறைவனை வேண்டினார். ஏனெனில்,

**கஷ்டங்களைக் கண்டு அஞ்சுதல் ஆண்மையை இழப்பதாகும்.**

சிவனடியார்களுக்கு முத்திகிடைப்பது சுலபம் என்பதனாலாகும்.

நான்குமார்க்கங்கள் மூலமும் இறைவனை அடைவது சாத்தியமானதாகும். சரியை, கிரியை, யோக நெறியில் நின்றதன்பின் ஞானத்தால் சிவனடியைச் சேரலாம் என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது. சரியை நெறியாளனை ஆலயத் தொண்டனாகக் கருதலாம். ஆலயங்களிலே திருவிளக்கிடுதல், திருமெழுகிடுதல் போன்ற எளிய தொண்டு களைச் சரியைத் தொண்டுகளாகக் கருதலாம். அருவுரு நிலையில் சிவனை வழிபடுதல் கிரியைத் தொண்டு எனலாம். "காயமே கோயிலாக........" இறைவனை ஆதரிக்கின்ற பாங்கு புறநிலையோடு அகநிலையில் இறைவனுக்கு ஆற்றும் பூஜனையாகக் கொள்ளப் படுகின்றது. யோகமானது சிந்தையில் தியானித்து புலன்களை அடக்குதல் ஆகும். இங்கு மனிதனால் சிந்தித்து, சிந்தனைவழி தியானித்து இறைவனைத் தரிசிக்கும் பக்குவம் அமைகிறது. முத்திறமேனிக்கும் அப்பாலாய் விளங்கும் அகண்டாகார சச்சிதானந்த சொருபியை வழிபடுதல் ஞானம் எனச் சுட்டப்பெறும். நற்பொருளைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை எனும் நான்கும் ஞானத்துள் அடங்கும்.

ஆலயத் திருத்தொண்டுகளைச் செய்வதன்மூலம் விடுதலையடையலாம். திருவலகிடுதல், திருநந்தவனம் அமைத்தல், சுகந்ததூபமிடல், மாலை கட்டுதல், தோத்திரம் பாடுதல், புஷ்பம் எடுத்தல், திருவிளக்கேற்றுதல், பூஜைத் திரவியங்களைக் கொடுத்தல் என ஆலயத் தொண்டுகள் பலவுள. இவ்வாறான தொண்டுகளைச் செய்து முத்தியடைந்தோர் பலர் உளர் என்று பெரியபுராணம் கூறுகின்றது.

கன்மத்தை நீக்கி மும்மலங்களை (ஆணவம், கன்மம், மாயை) நீக்குவதன் மூலமும் முத்தியடையலாம். கன்மத்தைப் போக்கி முத்தியடைந்தமைபற்றிச் சேக்கிழார் கூறியுள்ளார். இளையான்குடி மாறனாரின் வரலாறும் இதனைச் சுட்டிநிற்கின்றது. மேலும் நல்வினை செய்வதாலும் ஆன்மாக்கள் முத்தியடைகின்றன.

தாள் + தலை எனும் இரு சொற்கள் தாடலை எனும் ஒரு சொல்லாக அத்து விதப்பட்டு இணைந்து இருப்பதுபோல முத்திநிலையில் சிவனும், ஆன்மாவும் இரண்டும் அற்ற நிலையில் இணைதலே முத்தி என்று சித்தாந்தம் விபரிக்கின்றது. அந்தவகையில் கிடைத்த சரீரத்தின்மூலம் கடவுளை வழிபட்டு முத்திப்பேறு பெறுவோமாக.

**வேண்டுவன**

மெய்ஞ்ஞான சித்தர்கள்
தவமியற்றிச் சமாதியடைந்த!
நெய்தல் நிலத்துப் பூவரச மர
நிழலிற்குடி கொண்ட குருவடிவேலா!
வாய்கட்டி பூஜனை புரிதலை
ஏற்றருள் புரியும் தமிழ்ஞான
தெய்வமே வேல்முருகா வேண்டுவன
வெல்லாம் எமக்கருள் புரிவாய்!!

*இராம ஜெயபாலன் அவர்கள்*

உன் வாழ்வு புல் நுனிமேல் நீர்போல் மெதுவாக அசையட்டும்.

உ

# முருகநாமச் சிறப்பு

திருமதி அநுசூயா அருளானந்தன் அவர்கள்

*சேய், சேயோன்:-*

சேயோன் என்ற பெயர் நிறம் பற்றியும் இளமை பற்றியும் வந்தது. முருகன் செந்நிறம் உடையவனாதலால் அவனுக்கு இப்பெயர் அமைவாயிற்று. குழந்தைகளையும் சேய் என்கிறோம். இளமையும் செம்மை நிறமுமுடைய முருகனுடைய பெயர். இளமை ஒன்றே பற்றி குழந்தைகளுக்கு பெயர் ஆயிற்று. இதனை தாயும், சேயும் என்பன போன்ற உலக வழக்குக்களிலும் காணலாம். சேய் என்ற முருகன் பெயர் இளமைப் பண்பிற்காகி அதனையுடைய குழந்தைக்குமாயிற்று.

*வேலன்:-*

வேலன் என்பது வெற்றியைத் தருகின்ற வேலைக் கையில் ஏந்தியமையால் வந்த பெயர். முருகனுக்கு அடையாளமான படைவேல். வேலை ஏந்தியவன் வேலன்.

*ஆறுமுகன்:-*

ஆறுமுகங்களையுடையவன். சிற்சக்தியாகிய சிவசக்தியின் வதனம் ஒன்று சிவபெருமானுடைய முகம் ஐந்துமாம். இந்த ஆறு முகங்களும் ஆன்மாக்கள் விருப்பு நிறைவேறும் வண்ணம் திருவருளே காரணமாக இயற்றப்பெறும் படைத்தல் முதலான ஐந்தொழில் இயற்றுவதற்காக அபேத சிவசக்தியான சிற்சக்தியின் பத்தில் ஒரு கூறு வலியுள்ள மகாசாதாக்கியம் எனும் தத்துவமும், மகா சாதாக்கிய மூர்த்தியும் பொருந்தின் கீழ் நோக்காகவுள்ள அதோமுகம் பராசக்தியின் பத்தில் ஒரு பங்கு வலியுள்ள சாதாக்கிய தத்துவமும், சதாசிவ மூர்த்தியும் பொருந்தின மேல் நோக்காகவுள்ள ஈசானமுகமும், ஆதி சக்தியின் பத்தில் ஒரு கூறான அமூர்த்தி சாதாக்கிய ஈசன் எனும் மூர்த்தியும் பொருந்தின. மேற்கு நோக்கிய சக்தியோ சதாமுகமும், இச்சா சக்தியின் பத்தில் ஒரு கூறு வலியுள்ள மூர்த்தி சாதாக்கியமும், பிரமீசன் எனும் மூர்த்தியும் பொருந்தின. வடக்கு நோக்கியுள்ள வாமதேவ முகமும், ஞான சக்தியின் பத்தில் ஒரு கூறு வலியுள்ள கன்ம சாதாக்கியமும், ஈசானன் என்ற மூர்த்தியும் பொருந்தின. கிழக்கு நோக்கியுள்ள தற்புருட முகமாம். இவைகளே முருகனுக்குரிய முகங்கள் ஆறும் ஆகும்.

*குமரன்:-*

இது சிவன் மகன் என்ற காரணம் பற்றி வந்த பெயர். ஆணவ மல பந்தங்களை நீக்குபவன் என்ற பொருளும் உரைக்கலாம்.

*காங்கேயன், கார்த்திகேயன்:-*

கங்கை மைந்தன், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் எனவும் பொருள்படும்.

**முன்னேற்றம் என்பது இன்றைய முயற்சியும் நாளைய நம்பிக்கையுமாகும்.**

*கோழிக் கொடியோன்:-*

அக்கினி தேவனையும், சூரன் உடற்பிளப்பின் ஒன்றான கோழியையும் கொடியாகக் கொண்டவன் என்பது பொருள். நமக்கு ஒரு தலைவன் உண்மையை உணர்த்துவது கோழிக்கொடி.

*கடம்பன்:-*

கடப்பமலர் மாலையைச் சூடியவன். இது நித்திய தூய்மையை உணர்த்தும்.

*தேவசேனாதிபதி:-*

தேவர்களாகிய சேனைக்குத் தலைவன். ஆன்மாக்களை ஆளும் நாயகன்.

*விசாகன்:-*

வைகாசிமாதம் விசாக நட்சத்திரத்தில் தோன்றியவன். மைஞ்ஞையூர்தி மயிலை வாகனமாகக் கொண்டு ஊர்பவன் ஆகும்.

*தெய்வயானை காந்தன்:-*

தேவேந்திரன் புத்திரியான தெய்வயானை அம்மையாருக்குக் கணவன்.

*குறிஞ்சி வேந்தன்:-*

பரங்குன்று, பழநிமலை முதலிய இடங்களில் ஆட்சிபுரிபவன். மலைபோல் உயர்ந்த மனத்தை இடமாகக் கொண்டு விளங்குபவன்.

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| திரு அருச்சுனன் | சுன்னாகம் | 1000. 00 |
| ச. பத்மநாதன் | சிறுப்பிட்டி (தோப்பு) | 1500. 00 |
| த. பார்த்தீபன் | வதிரி | 3000. 00 |
| நா. நடராசா கேணியடி | குப்பிளான் | 2000. 00 |
| இ. சுதர்சன் இமையாணன் | உடுப்பிட்டி | 500. 00 |
| செ. ஸ்ரீனிவாசன் முடக்காட்டு ஒழுங்கை | கரவெட்டி | 3000. 00 |
| திருமதி அ. குணநாயகம் அமரா றேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| வ. அப்புத்துரை மூலம் க. புஸ்பமலர் | வல்வெட்டி | 5000. 00 |
| T. சண்முகபாலன் தொண்டைமானாறு | அவுஸ்திரேலியா | 9250. 00 |
| க.ச. கணபதிப்பிள்ளை | கைதடி | 3000. 00 |
| து. சிவசித்தன் | கந்தரோடை | 2000. 00 |
| வி. தனக்குமார் | அளவெட்டி மத்தி | 1000. 00 |
| சி. ஸ்ரீஆனந்தராஜா (அவுஸ்திரேலியா) | நவிண்டில் | 15000. 00 |
| Dr. செ. சிவசம்பு | தொண்டைமானாறு | 8000. 00 |
| அருளையா சுப்பிரமணியம் | நீர்வேலி மேற்கு | 1000. 00 |

(தொடரும்...

**நீ கொதிநீராகினாலும் நெருப்பாக ஆகிவிடாதே.**

உ

(தொடர்ச்சி...

# இறைவனையே தூக்க வைக்கும் தமிழ்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

*நாம்* நம் மொழியருமையை உணராமல் பிறமொழி மேலாதிக்க வயப்பட்டு எம் மொழியையும் இழந்து, பிறதெய்வவழிபாட்டை மேற்கொண்டு, தமிழரென்று வாழ்ந்திடுதல் நலமோ சொல்வீர். சுமார் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமான சுவாமிகள் இத்தீந்தமிழின் செவ்வியை நினைந்து மெய் நனைகின்றாரே. இதை நாம் படியாது காலத்தை வீணே கழிக்கிறோமே! சினிமாப் பாடலையும், நேயர் விருப்பங் களையும், விமர்சனங்களையும் நம் மத்தியில் விதைக்கிறோமே!

மிடிஇட்ட வாழ்க்கையால் உப்புஇட்ட கலம்எனவும்
மெய் எலாம் உள் உடைந்து
வீறு இட்ட செல்வர்தம் தலைவாயில் வாசமாய்
வேதனைகள் உற வேதனும்
துடிஇட்ட வெவ்வினையை ஏவினான்; பாவிநான்
தொடர்இட்ட தொழில்கள் எல்லாம்
துண்டுஇட்ட செந்தமிழின் அருமை இட்டு ஆரூரில்
அரிவையோர் பரவைவாயில்
அம்மட்டும் அடிஇட்டு நடைநடந் தருள் அடிகள்
அடிஈது முடிஈது என
வடிஇட்ட மறைபேசு பச்சிளங்கிள்ளையே!
வளமருவு தேவையரசே!
வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே!

-தாயுமானவர்- மலைவளர் காதலி 4

மிடி இட்ட- வறுமை நிறைந்த, வீறு இட்ட செல்வர்தம்- மிகப்பெரிய பணக்காரன் உடைய, வேதனும்- பிரம்மதேவனும், துடி இட்ட வெவ்வினையை- பதைப்பதற்குரிய கொடிய நோயை, துண்டு இட்ட- துண்டிக்கப்பட்ட, சாண் கும்பியின் பொருட்டு- ஒரு சாண் அளவாயுள்ள வயிற்றுக்காக, அடி இட்ட பழைய, நடை நடந்தருள் அடிகள்- நடந்து சென்று அருள்புரிந்த சிவனார், அடி ஈது முடிஈது- இது பாதம் இது தலை, வடி இட்டமறை- தெளிவுபடுத்தியவேதம்; அடியிட்ட செந்தமிழின் பழமையாகிய செந்தமிழின், அருமைஇட்டு- அருமையைக் குறித்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பரவையாரின் ஊடலைத் தீர்க்க (திருவாரூர்த்தியாகேசன்) தூது சென்றார் எனப்பாடிய தாயுமானவரின் செவ்விதான் என்னே. இதையே- பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூது சென்ற பரமன் அருளால் வளர்ந்த குமரேசா. என்று பாடினார் அருணகிரியார்.

பாகத்தினால் கவிதை பாடிப் படிக்கவோ
பக்திநெறி இல்லை: வேத

பாராய ணப் பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையும் இல்லை
சச்சிதானந்தசிவம்- 3

கன்னல் அமுது எனவும் முக்கனிஎனவும் வாய் உளது
கண்டு எனவும் அடி யெடுத்துக்
கடவுளர்கள் தந்தது அது அமுது அமுது பேய்போலக்
கருத்தில் எழுகின்ற எல்லாம்
என்னதுஅறி யாமை அறிவு எனும் இருபகுதியால்
ஈட்டு தமிழ்; என் தமிழினுக்கு
இன்னல் பகராது உலகம் ஆராமை மேலிட்டு
இருத்தலால் இத்தமிழையே
சொன்னவன் யாவன் அவன்முத்தி சித்திகள் எல்லாம்
தோய்ந்த நெறி யேபடித்தீர்
சொல்லும் என அவர்; நீங்கள் சொன்ன அவற்றிற் சிறிது
தோய்ந்தகுண சாந்தன் எனவே,
மின்னல் பெறவே சொல்ல அச்சொற்கேட்டு அடிமைமனம்
விகசிப்பது எந்நாளோ?
வேதாந்த சித்தாந்த சமரச நன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே
சித்தர்கணம்

கன்னல்- கருப்பஞ்சாறு, வாயு ஊறு கண்டு- வாயில் அடக்கியுள்ள கற்கண்டு, அடிஎடுத்துக் கடவுளர்கள் தந்தது அல- திருவருளால் தூண்டப்பெற்றுப் பாடியதல்ல; ஈட்டு தமிழ்- சொல்லிய தமிழ்ப் பாட்டாகும். என் தமிழினுக்கு- அப்படி என்னாற் பாடப்பட்ட தமிழ்ப் பாட்டினிற்கு, இன்னல் பகராது உலகம்- உலகம் குறை கூறாது; ஆராமை மேலிட்டு இருத்தலால்- பேரன்பு அதிகப்பட்டு இருத்தலால், படித்தீர்- படித்தவர்களே குணசாந்தன்- நற்குணம் சிறிது படைத்தவன் விகசிப்பது- மகிழ்வடைவது. நால்வர் போன்ற ஏனையோரது பாடல்களுக்கு என்பாடல்கள் ஒப்பாகா எனக்கூறும் தாயுமானவரின் தற்சிறுமையை உரைக்கக் கட்டளைக்கல்லே இல்லை எனலாம்.

இதுவரையிலே தமிழின் செவ்வியும், திறமும், அதன் பெருமையும் பயனும் கண்டோம். அத்தமிழை ஊடகமாகக் கொண்ட பொது இலக்கிய இலக்கணங்களை விஞ்சி இறைபுகழும், இலக்கணமும் சொன்ன அருளாளர்களின் வார்ப்பே எம்மை வாழ வைக்கும் என்ற உண்மையையும் தெளிந்தோம். இந்நீரோட்டத்திலே இறைவனை மணிவாசகர் எப்படிப் பாடியுள்ளார் என்பதை மட்டும் அவரின் ஆளுமைகள்மூலம் காண்போம். இறைவன் அரு உரு அருவுரு உடையவன். சகுண- நிர்க்குண- சகுண நிர்க்குணமானவன். எனவே எம்பெருமானைத் தன் அகக்காட்சியிற் கண்டு அனுபவித்த- அநுபூதி- வெளிப்பாடே திருவாசகம். அதிலே இறைவன் தோற்றப் பெருமை தமிழ்ச் சொற்களாலேயே வெளிப்படுத்தப்படுகிறது.

பொய்யை மறவாதே, மறந்தாயானால் மெய் பேசமாட்டாய்.

அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மைவளப் பெருங்காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்படவிரிந்தன
இல் நுழை கதிரின்துன் அணுப்புரையச்
சிறிய ஆகப் பெரியோன்....

(திரு அண்டப் பகுதி 1-6)

ஒருவன் எண்ணும் ஒருவன் காண்க
மேலது 43
அருபரத்து ஒருவன் அவனியில்வந்து
குருபரன் ஆதி அருளிய பெருமையை
(போற்றித்திரு அகவல் 76-77)
ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி
(திருவெம்பாவை)
தன்மை பிறரால் அறியாத தலைவா
(சதகம் 59)
ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாற்கு
தெள்ளேணம் 1
ஒன்று நீயல்லை அன்றி யொன்றில்லை
கோயில் திருப்பதிகம் 7
மனவாசகம் கடந்தான்
உயிருண்ணிப் பத்து 3
ஓங்காரத்துட் பொருள்
அச்சோப்பதிகம் 7
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

(முற்றும்)

## கடவுளைத் தேடி...

இறைவனின் தெய்வீக உருவத்தை, குணங்களை, உண்மை இயல்பை முழுமையாகத் தியானம் செய்வது ஒன்றுதான் நமது கடமையாகும். இதைத் தவிர நமக்கு வேறு கடமை எதுவுமில்லை. இறைவனது சிந்தனையில் முழுமையாக மூழ்கியிருப்பவர்களிடம் ஏற்கனவே இருப்பதைப் பாதுகாத்து, அவர்களிடம் இல்லாததை அவர்களுக்கு அளிப்பது இறைவனின் கடமையாகும்.

சுயநலமற்ற பணிபுரிவதன்மூலம் மனம் தூய்மை அடைகிறது. தூய்மையான உள்ளத்தில் ஆத்ம ஞானம் தானாகவே தோன்றுகிறது.

ஆடம்பரம் இல்லாதது போல் நீ வாழுவதும் ஓர் ஆடம்பரமே.

உ

# நாமும் பயன்பெறுவோமாக!

திருமதி கனகா சிவசுப்பிரமணியம் அவர்கள்

இறைவழிபாட்டிற்குப் புலனடக்கம் மிகவும் இன்றியமையாததாகும். இதற்குத் துணைபுரிபவை விரதங்களே ஆகும். விரதம் என்றால் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை விதிப்படி வழிபடுதலே ஆகும். சைவசமயத்தவர்கள் அனுட்டிக்கும் விரதங்கள் பலவுண்டு. வாரம், மாதம் ஆண்டுதோறும் வரும் புண்ணிய நாட்களில் விரதமிருந்து மெய்யன்போடு இறைவழிபாடு செய்தால் உடல்நலமும், மனநலமும் ஆன்மவளர்ச்சியும் ஏற்படும். இந்தவகையில் சிவகுமாரர்களின் இளையவரான சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதங்களாக சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஆண்டுதோறும் ஐப்பசிமாதத்து வளர்பிறைப் பிரதமை தொடக்கம் சட்டிவரையுள்ள ஆறு நாட்களும் அழகும் வீரமும் மிகுந்த சுப்பிரமணியக் கடவுளை விரதமிருந்து வழிபடுதல் மிகவும் சிறந்ததாகும்.

கந்தசஷ்டி விரதம் முருகப்பெருமான் தேவர்களைக் காக்கும் பொருட்டுச் சூரனைச் சங்காரம் செய்த அருட்செயலைக் குறிக்கும். இவ்விரதத்தை மேற்கொள் பவர்கள் ஆறு தினங்களையும் பெரும்பேறாகவும் தவமாகவும் கருதி ஆறுதினங்கள் உபவாசமாக இருந்து ஏழாம்நாள் அதிகாலை நீராடி அநுட்டானங்களை நிறைவேற்றி பாரணைப் பூசை முடிந்ததும் மாகேஸ்வர பூசை செய்து விரதத்தை நிறைவுசெய்வர். உபவாசம் இருக்க இயலாதவர்கள் ஒருவேளை உணவருந்தி ஆறாம்நாள் உபவாசமாக இருக்க வேண்டும். சிலர் முருகன் ஆலயத்தில் தங்கி இருந்து மௌனவிரதம் அனுட்டிப்பர். சட்டி விரதத்தை ஆறு ஆண்டுகள் தொடர்ந்து அனுட்டிக்க வேண்டும். இத்துடன் மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சட்டியிலே கந்தப்பெருமானை வழிபட்டு மாம்பழம் பால், மிளகு போன்றவற்றில் ஏதாவது ஒன்றை உட்கொள்வது மிகச் சிறந்தது.

கந்தசஷ்டி விரதத்தை அனுட்டிப்பதால் செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப் பேறு போன்றன கிட்டும். மனிதர்களின் தீய பண்புகளாகிய காமம், வெகுளி, உலோபம், மயக்கம், செருக்கு, பொறாமை போன்றவற்றை அழித்து தெய்வீகப் பெருவாழ்வு வாழ அருள் கொடுப்பதே இவ்விரதத்தின் உள்நோக்கமாகும். இதனைப் புலப்படுத்துவதற் கும் மக்களுக்கு அருள்பாலிப்பதற்குமே ஆறாம்நாள் ஆலயங்களில் சூரசம்காரம் நடைபெறுகின்றது.

இவ்விரதத்தின் தொடக்க நாளிலே ஆலயம் சென்று தர்ப்பை அணிந்து காப்புக் கட்டல் வேண்டும். இறுதிநாளில் காப்பை அவிழ்த்து, தட்சனையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். விரதநாட்களில் ஆலயங்களில் புராணபடனம் நிகழும். புராணபடனத்தின்போது கந்தபுராணம் படிக்கப்படும். கற்கும் ஆற்றல் உள்ளவர்கள் படித்துப் பயன்பெற வேண்டும். கற்க இயலாதவர்கள் கேட்டுப்பயன்பெற வேண்டும். கந்தபுராணம் ஓதுவதால் ஏற்படும் பயன்பற்றி, கந்தபுராணக் காப்புச்செய்யுள் பின்வருமாறு கூறுகின்றது.

"இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணந்தன்னைக் காதலித்தோதுவோரே"

கந்தபுராணம் மட்டுமன்றி, கந்தசட்டி கவசத்தையும் ஓதும் மரபு காணப்படுகின்றது. கவசத்தினை காதலித்து ஓதுபவர்களுக்கு வல்வினை, துன்பம்போய் செல்வமும் நிஷ்டையும் கைகூடுவதோடு நிமலன் அருளும் கிட்டும் என்று கந்தசட்டி கவசம் கூறுகின்றது. கந்தசட்டி விரதத்தினை அனுட்டிப்பவர்களில் சிலர் முருகன் ஆலயத்தில் ஆறுநாட்களும் இருந்து விரதத்தை அனுட்டிப்பர். மக்கள் சிலர் விரதம் என்றால் உணவருந்தாது இருத்தல் ஆலயம் செல்லல் என்று மட்டுமே எண்ணுகின்றனர். விரத காலங்களில் உடற்றூய்மை பேணுவதுடன் உள்ளத்தூய்மை பேணுவதும் மிக அவசியமாகும். களவு, பொய், பொறாமை, ஏமாற்றும் பண்புகள் உள்ளத்தைக் கெடுக்க வல்லன. இவற்றை அகற்றி மற்றவர்களுடன் இன்முகத்துடன் இனிமையாகப் பேச வேண்டும். மற்றவர்களின் மனம் புண்படாவண்ணம் நடத்தலே பெரியவிரதமாகும். இதனால்தான் மனம்போல் வாழ்வு என மூத்தோர்கள் கூறியுள்ளனர்.

விஞ்ஞானம் வளர்ந்து வரும் இக்காலத்தில் விஞ்ஞானியரும் மெய்ஞானத்தை நம்புகின்றனர். விரதம் அனுட்டித்தலே ஒருவகை உடற்பயிற்சி என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இன்றைய மக்களிடம் இப்பண்புகள் அருகிவருவதோடு இறை நம்பிக்கையும் குறைந்து வருகின்றது. விரதம் அனுட்டிக்கும் முறைகளையும் தம்வசதிக்கேற்ப மாற்றி வருகின்றனர். விரதநாட்களில் உடலாலும் உள்ளத்தாலும் இறைபணியில் எம்மை இணைத்துக்கொள்ள வேண்டும்.

கந்தசட்டி விரத காலத்தில் அநேகமானவர்கள் கந்தசட்டி கவசத்தைப் படிக் கின்றார்கள். ஆனால், அதன்பொருளறிந்து ஆசாரத்துடன் படிப்பவர்கள் எத்தனைபேர்? கந்தசட்டி கவசத்திலே அது எப்படிப்படிக்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்றமையைக் காணலாம். அதாவது

"..... காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்தசட்டி கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுரு கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீறணிய....." இவ்வாறு தூய்மையுடன் கவசத்தை ஓதவேண்டும் என்பது வற்புறுத்தப்படுகின்றது.

மற்றவர்களை வாழ்த்துதலாலும் பாராட்டுதலாலும் வாழ்த்துபவருக்கும் வாழ்த்துப் பெறுபவருக்கும் மகிழ்ச்சி. இந்தநிலை இன்றைய காலகட்டத்தில் குறைந்துவருகின்றது. குறைகூறுவதே மிகுந்து வருகின்றது. கவசமானது நாம் முருகனை வாழ்த்துவதால் நாம் வளமாக மகிழ்வாக வாழலாம் என்ற படிப்பினையை உணர்த்துகின்றது.

இறைவன்மேல் நாம் கொள்ளும் நம்பிக்கை வைராக்கியம் மிக்கதாக இருக்க

வேண்டும் என் செயலாவது யாதொன்றுமில்லை; தெய்வமே எல்லாம் உன் செயல் என்கின்ற சரணாகதி நிலை வேண்டும்.

"…. மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவணபவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்" என்ற பூரண சரணாகதியைக் கந்தசட்டி கவசம் எடுத்துக்கூறுகின்றது.

இவ்வாறான சிறப்புக்களையெல்லாம் உள்ளடக்கிய கந்தப்பெருமானின் விரதமாகிய கந்தசட்டி விரதத்தினை விதிப்படி அனுட்டித்து எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பயன்பெறுவோமாக.

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| திரு நிர்மலானந்தன் | நவக்கிரி | 2000. 00 |
| வைத்தியலிங்கம் அன்சன்ஸ் ஸ்ரான்லி வீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி 5k பருப்பு |
| திரு பெரியதம்பி மணியம் ஸ்ரோர்ஸ் | கஸ்தூரியார் வீதி | 5000. 00 |
| க. சபாபதிப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 4000. 00 |
| துவாரகன் ஜெயராம் | பருத்தித்துறை | 2000. 00 |
| கு. செல்வரெத்தினம் | அச்சுவேலி வடக்கு | 1மூடை அரிசி |
| க. நடராசா இராசாவின் தோட்டம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு யோகநாதன் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| மா. தங்கவேல் போடிங்றோட் | பருத்தித்துறை | 2500. 00 |
| Dr P. சிவபாலன் சந்நிதி வைத்தியசாலை | கொழும்பு | 5000. 00 |
| க. நித்தியானந்தம் G.S. செல்வி சாமித்திரேகா | திருநெல்வேலி | 4000. 00 |
| செ. சிவனேசன் | அச்சுவேலி | 3000. 00 |
| பா. யோகச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| பு. ஜெயராணி | நவக்கிரி | 1000. 00 |
| வ. நித்தியா | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| சு. பரஞ்சோதி | கோண்டாவில் | 1000. 00 |
| ப. கிருஸ்ணதாஸ் | கோண்டாவில் | 1000. 00 |
| இ. சக்தி ஆனந்தன் | கோண்டாவில் | 500. 00 |
| ந. மகேஸ்வரி | கல்வயல் | 500. 00 |
| கோகுலரமணன் கிருஸ்ணசிறி | இத்தாலி | 5000. 00 |
| நா. ஐயம்பிள்ளை தம்பாலை | அச்சுவேலி | 6000. 00 |
| ந. திரவியம் | புலோலி | 1000. 00 |
| செல்வி ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| சொ. செல்லத்துரை பத்திரகாளி ஒழுங்கை | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| திருமதி உலோகினி வடிவேலு பாலச்சந்திரன் | பிரான்ஸ் | 5000. 00 |
| திருமதி குமுதினி நேசரெத்தினம் | லண்டன் | 5000. 00 |
| திரு திருமதி N. வரதீசன் லண்டன் நடேசன்மூலம் | | 10000. 00 |

(தொடரும்...

உ

# விரதங்கள்

திருமதி விஜயலட்சுமி பகீதரன் அவர்கள்

மனிதர்களின் வாழ்க்கை நெறியைக் கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கவும், ஆன்மீக நெறியில் இட்டுச்செல்லவும் விரதம் முக்கிய சாதனமாக விளங்குகிறது எனலாம். ஒருவன் தான் சிறந்ததொரு சைவசமயி என்பதற்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்குவன. தீட்சை, ஆலயதரிசனம், தானதர்மம் செய்தல், விபூதி தரித்தல், விரதம் அனுட்டித்தல் என்பனவாகும். நோன்பு, உபவாசம் என்ற சொற்பிரயோகங்கள் இவ்விரதத் துடன் தொடர்புபட்டனவாக விளங்குகின்றன. விரதம் என்ற சொல்லின் விளக்கத்தை வேதங்களினூடாக விளங்கிக்கொள்ள முடிகிறது. 'ரிதம்' என்ற வடமொழிச் சொல்லுடன் விரதம் தொடர்புபடுகிறது 'ரிதம்' என்றால் ஒழுக்கம், கட்டுப்பாடு எனப் பொருள்படுகிறது. இவ்விரதமும் மக்களின் ஆன்மீகத்திலும், வாழ்க்கையிலும் கட்டுக்கோப்பான ஒழுக்கத் தைப் பேணிக்கொள்ள உதவுகிறது எனலாம்.

யாழ்ப்பாணத்து மக்களின் சைவசமய கலாசார வித்தகராக விளங்கிய ஆறுமுக நாவலர் அவர்கள்,

"மனம் பொறி வழிபோகாது நிற்றற் பொருட்டு
உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு,
காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்
யன்போடு வழிபடுதலே" விரதம் என்று கூறியுள்ளார்.

'உபவாஸம்' என்பது இறைவனுக்கு மிக அருகில் வசித்திருத்தல் என்பதாகும். உப +வாஸம்- உப என்பது அருகில், வாஸம்- வசித்திருத்தலையும் கருதும். 'நோன்பு' என்பது உணவை விடுத்தல் என்னும் நியமத்தோடு பொறுமை எனும் பண்பைக் கடைப்பிடித்தலைக் கருதும். இது விரதத்தில் உயர் நிலையைக் கருதும். ஒரு வகையில் தவம் என்றும் இந்நிலையைக் கூறலாம். தவசிகள், முனிவர்கள், துறவி களுக்குச் சிறப்பாக உரியது நோன்பு ஆகும்.

விரதம் என்பது ஒரு விசேட வழிபாடு, விசேட கிரியை என்றே கூறலாம். ஆலயங்களில் இடம்பெறும் கிரியை முறைகளில் விரதக்கிரியையும் இடம்பெறுகிறது. விரதத்தினை அனுட்டிப்பவர்கள் அவ்வவ் விரதமுறைகளின் விதிகளுக்கு ஏற்ப அனுட்டித்தல் சாலச்சிறந்தது. ஆகமங்களில் கூறப்பட்டதற்கு இணங்க அந்தணர்களின் ஆலோசனைப்படி மேற்கொள்ளலாம். சாதாரணமாக பஞ்சாங்கத்தினையும் பயன்படுத்திக் கொள்ளலாம். விரதம் அனுட்டித்ததன் பலன் அனுட்டித்த வழிமுறையிலேயே உள்ளது. விரதம் என்ற சாதனத்தினை அதற்குரிய விதிமுறைகளுடன் அனுட்டித்து ஐம்புலன்களை யும் அடக்கி, திரிகரண சுத்தி உடையவர்களாக இருத்தல் வேண்டும். விரதத்தினை மேற்கொள்ளலின் முக்கிய நோக்கம் மனவடக்கத்தை மேம்படுத்தலாகும்.

இவ்வாறு நாம் மேற்கொள்ளும் விரதங்களை கடவுளர்க்குரிய விரதங்கள், பிதிர்களுக்குரிய விரதங்கள் என்று வகைப்படுத்த முடியும்.

காகம் வலமானால் ஆயுள் விருத்தியாகும்.

***கடவுளர்க்குரிய விரதங்கள் என்ற வகைப்பாட்டில்:-*** சிவவிரதம், சக்திவிரதம், விநாயக விரதம், கந்தவிரதம், வைரவ விரதம், வீரபத்திர விரதம், விஷ்ணுவிரதம் என்பன அடங்கும். இவற்றில் அடங்குகின்ற முக்கிய விரதங்களாக

***சிவ விரதம்:-*** சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுரவிரதம், சிவராத்திரி விரதம், கேதாரவிரதம் கலியாணசுந்தர விரதம், சூலவிரதம், இடபவிரதம், பிரதோஷ விரதம் என்பவற்றைக் கூறலாம்.

***சக்தி விரதம்:-*** உமாசுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம், வரலட்சுமி விரதம் என்பனவாகும்.

இவற்றில் வரலட்சுமி விரதம் ஆவணிமாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக் கிழமையில் அனுட்டிக்கப்படவேண்டியது ஆகும். சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு என்னும் பலன்களை முன்வைத்து வரலட்சுமி தேவியை வழிபட்டு விரதத்தை பெண்கள் அனுட்டிப்பர். இவ்விரதத்தினை ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுட்டித்தல் வேண்டும். ஒன்பது முடிச்சுக்கள் கொண்ட காப்பினை பூசை முடிவில் வலக்கையிற் கட்டிக் கொள்ளல் சிறப்பானதாக அமைகிறது. இவ்விரதத்தினைநண்பகல் போசனம், இரவு பலகாரத்துடன் அனுட்டிக்கலாம். உபவாசம் இருத்தல் விதியாக இல்லை.

***விநாயக விரதம்:-*** சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம் என்பனவாகும்.

***கந்தவிரதம்:-*** சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் என்பன அடங்கும்.

***வைரவ விரதம்:-*** மங்கலவார விரதம், சித்திரைப்பரணி விரதம், ஐப்பசிப்பரணி விரதம் ஆகியன. இவற்றுள் மங்கலவார விரதம் எனப்படுவது தை மாதத்து செவ்வாய்க்கிழமை தோறும் வைரவக்கடவுளை நினைந்து வழிபடுதலைக் கருதும்.

***வீரபத்திர விரதம்:-*** செவ்வாய்க்கிழமைதோறும் அனுட்டிக்கும் மங்கலவார விரதத்தினைக் குறிப்பிடலாம்.

***விஷ்ணு விரதம்:-*** ஏகாதசி விரதம், மகாநவமி குறிப்பிடத்தக்கன. இவற்றுள் "வைகுண்ட ஏகாதசி விரதம்" சிறப்புக்குரியதாகும்.

விரதவகைப்பாட்டில் பிதிர்களுக்குரிய விரதம் எனும்போது அமாவாசை விரதம், பௌர்ணமி விரதம் குறிப்பிடத்தக்கன. பிதிரர்கள் என்பது இறந்த ஆன்மாக்களைக் கருதும். அவற்றின் ஆத்ம சாந்திக்காகவும், அவர்களின் கடன்களைத் தீர்க்குமுகமாகவும் இதனைப் பின்பற்றுவர். இறந்த தந்தைக்காக அமாவாசை விரதத்தினை மாதந்தோறும் மேற்கொள்ளலாம். இவற்றுள் ஆடிமாதத்து அமாவாசை விரதம் சிறப்புக்குரியதாகும்.

அதேபோன்று இறந்த தாய்க்காக பௌர்ணமி விரதம் அனுட்டிப்பார்கள். இவற்றுள் சித்திரை மாதத்துப் பௌர்ணமி விரதம் சிறப்புக்குரியதாகும்.

மேலும் விரதங்கள் மாதங்கள், வாரங்கள் நட்சத்திரங்களுடன் தொடர்புபட்டும் மக்களால் அனுட்டிக்கப்பட்டு வருகின்றன எனலாம். ஒவ்வொரு கடவுளை நினைந்து ஒரு மாதத்தில் வரும் ஒரு கிழமையை மையப்படுத்தி அனுட்டிப்பார்கள். அவற்றுள் பங்குனித் திங்கள் விரதம், ஆடிச்செவ்வாய் விரதம், 'ஆவணி ஞாயிறு விரதம், புரட்டாதிச்சனி விரதம், ஐப்பசி வெள்ளிவிரதம், கார்த்திகைத் திங்கள் விரதம் என்று அமைகின்றன.

இதுபோன்றே ஒவ்வொரு மாத்திலும் இடம்பெறும் நட்சத்திரங்களை மையப்படுத்தி அனுட்டிக்கும் விரதங்களாக தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணிமூலம், ஐப்பசி உத்தரம், கார்த்திகைக் கார்த்திகை, மார்கழித் திருவாதிரை என்பன அடங்குகின்றன.

மகோற்சவ காலங்களிலும் மக்கள் விரத அனுட்டானங்களை மேற்கொள்கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்தி வாய்ந்த ஆலயங்களான செல்வச்சந்நிதி, நல்லூர், வல்லிபுர ஆழ்வார், நயினை நாகபூஷணி தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்காலங்களை விரதகாலங்களாகப் பெரும்பாலான மக்கள் பின்பற்றி வருகின்றனர். இவற்றைவிடத் தமது சூழலில் உள்ள ஆலய மகோற்சவங்களையும் விரத அனுட்டானங்களுடன் கடைப்பிடித்து வருகின்றனர். திருவிழாக்காலங்களில் அகச்சுத்தம், புறச்சுத்தம் பேணி ஆலய தரிசனம் செய்து விரதத்தினை நோற்பார்கள்.

விரதக்கிரியைகளின் முக்கிய அம்சமாக விளங்குவது அவ்விரதத்திற்கான உணவுகளைத் தயாரிக்கும் முறையின் பாற்பட்டது. விரதத்தை நோற்பவர்கள் அகச்சுத்தம், புறச்சுத்தம் பேணி காலையில் நீராடி, தூய்மையான வஸ்திரம் அணிந்து ஆலயவழிபாடு செய்து சைவ உணவைப் பொரித்தல், தாலிதம் இல்லாமல் செய்தல் முக்கியமானது ஆகும். ஆனாலும் எம்மவர்கள் மத்தியில் விரத உணவுகள் மிக விசேடமான முறையில் அறுசுவையுடன் சமைத்து உட்கொள்ளுதல் வழக்கமாகியுள்ளது.

இந்தவகையில் விரத அனுட்டானங்களை மேற்கொள்ள இயலாதவர்கள் தார்மீக நெறிநின்று வாழ்க்கையை முறைப்படி நடாத்துவது மிகப்பெரிய நோன்பாகக் கருதப் படும். சிலர் தமது தேவைகள் எண்ணங்களை நிறைவுசெய்து கொள்வதற்காகவும் தமது இஷ்ட தெய்வங்களை நோக்கி விரதங்களை அனுட்டிப்பார்கள். விரதங்களை முறைப்படி அனுட்டிப்பதன்மூலம் பாவ விமோசனம் கிடைக்கப்பெறுகிறது.

இவ்வாறாக, சைவசமயிகள் ஒவ்வொருவரும் விரதக்கிரியைகளை முறைப்படி அனுட்டித்தலினால் அவர்கள் வாழ்க்கை சிறப்பதோடு, பக்தியுணர்வு, ஆன்மீகம், மனவடக்கம். பொறுமை, கட்டுப்பாடு மேலோங்கி நிற்பதோடு சைவ மக்களது வாழ்க்கையும், நெறியும் மென்மேலும் தழைத்தோங்கும் என்பது திண்ணமாகும்.

---

உய்யும்வழி இரண்டு, பறவை பறப்பதற்கு உதவியாக இரு சிறகுகள் இருப்பதுபோல், மாந்தர் உய்யும்வழி இரப்பார்க்கு இடுவதும், இறைவனை நினைப்பதுமேயாகும்.

**நான் போகிறேன் என்பது உண்மை, ஆனால் எங்கே என்பதுதான் தெரியவில்லை.**

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் தொடர்- 14

திரு சிவ. மகாலிங்கம் அவர்கள்

*யோக*ம் மனிதனுடைய மனோநிலையை உயர்த்துகிறது. மனம் உயர்ந்தால் மனிதன் உயர்கிறான். யோகம் என்ற வடமொழிச் சொல்லுக்கு 'யூக்' ஒன்று சேர்வது என்பது பொருள். யோகம் என்பது சித்தவிருத்தியை நிரோதம் பண்ணுவது என்ற பதஞ்சலி மாமுனிவர் தமது யோக சூத்திரத்தில் கூறியுள்ளார். "யோகமே மோஷ வேறது" என யோக சூத்திரம் கூறுகிறது. இருபத்தைந்து தத்துவங்களையும் கடந்து இருபத்தாறாம் தத்துவமாக இறைவன் இருக்கிறான் என யோகமதம் கூறுகிறது. மனத்தை ஒருமைப்படுத்தி, இறைவனுடைய திருவுருவத் தியானத்தில் ஈடுபடச்செய்து எல்லாம் மறந்த சமாதிநிலையை அடைவதே யோகத்தின் இலட்சியமாகும். யோக மார்க்கம் ஆன்மா இறைவனை அடைவதற்கான வழியாக ஞானவாயிலாக உள்ளது. என்றே சைவசித்தாந்தம் கூறுகிறது. மனம் சாந்திஅடைவதற்கு யோகம் வழிகாட்டுகிறது என்றே யோக நூல்கள் கூறுகின்றன. ஹடயோகப் பிரதீபிகையில் அளவை, எல்லை வேறுபாட்டு உணர்ச்சி, துக்கம், நினைவு என்ற ஐந்தொழில்களையும் நீக்கி ஒன்றையும் பற்றாமல் மனம் அறிவாக நிலைபெறுதலே யோகம் என்று கூறப்பட்டுள்ளது. யோகம் மனத்தைப் பரிபக்குவப்படுத்துகிறது. அதனால் அதி சூக்குமமான உணர்ச்சி உண்டா கிறது. உருவமற்ற அறிவே வடிவான ஆண்டவனை அடைய வழி காட்டுகிறது என மாதவச் சிவஞானமுனிவர் சிவஞானபோதத்திற்குத் தாம் எழுதிய பாஷியத்தில் கூறியுள்ளார்.

அட்டாங்க யோகத்தில் இயமம் என்பது புலனடக்கத்தைக் குறிக்கிறது. நமது மனத்தால் ஏற்படும் சலனங்களை அடக்குதல் இயமம் எனப்படும். நற்குணங்கள் சீலங்கள் நிறைந்திருப்பது இயமம் ஆகும். புறக்காரணங்களை அடக்குதல், புறச் செயல்களைச் சீர்ப்படுத்துதல் நியமம் எனப்படும். வரையறையான பழக்கங்களை உடையது நியமம் ஆகும். அதன் பின்பு உடம்பைச் சரிப்படுத்தித் தியானத்திற்கு ஏற்றபடி அமைப்பது ஆசனம் எனப்படும். சிரசுமுதல் குய்யம்வரை நிமிர்ந்து உட்காருதல் வேண்டும். உடல் நிமிர்ந்திருக்கும் இந்நிலையைக் கட்டுத்தறி என்று சித்தர்கள் கூறுவார்கள். எப்படித் துணிநெய்பவர்கள் நூலை இழுத்துக் கட்டுவார்களோ அப்படியான நிலையில் உடலை நேராக நிமிர்த்தி இருக்கும் நிலை ஆதனம் எனப்படும். மூலத்திலுள்ள சக்தி ஆறு சக்கரங்களையும் தாண்டிச் சிரசை அடைவதற்கு தடைகள் எதுவும் இருக்கக்கூடாது. உடலில் இருக்கும் பிராணனை உடலிற் சீராக நிறுத்தும் முறை பிராணாயாமம் எனப்படும். மூச்சுக்காற்றைக் கட்டுப்படுத்துதலே பிராணாயாமம் ஆகும். அடங்காத குதிரைகளாக இருக்கின்ற மூச்சுக்காற்றை அடக்கியாளும் பயிற்சியே பிராணாயாமம் எனப்படும்.

நமது மனம் எப்போதும் வெளி உலகத்தைப் பற்றியே சிந்திக்கும். அதை வெளிச்செல்ல விடாமல் நம்முள்ளே நிறுத்துதல் பிரத்தியாகாரம் எனப்படும். எண்ணங்களை ஒன்று திரட்டுதல் என்பது இதன் பொருளாகும். பிரபஞ்சக் காட்டில்

திரியும் மனம் என்னும் நரியைக் கம்பீர நடைபோடும் குதிரைபோல ஆக்கி அதன்மேல் இறைவனை ஏற்றி வைத்து விடுதற்குப் பிரத்தியாகாரம் வழிகாட்டுகிறது. பலமுறை பல வழிகளில் தேடிக்கொண்டிருக்கிற இறைவனைப் பிரத்தியாகாரப் பழக்கத்தினால் எந்த நாளிலும் எந்த இடத்திலும் கண்டுகளிக்கலாம்.

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை இந்தப் பிண்டமாகிய உடலிலே காண்பதற்குப் பிரத்தியாகாரம் வழிகாட்டுகிறது. வெளியே செல்லும் இயல்புடைய மனத்தை உள்ளே பொருந்தும்படி செய்துவிட்டால் அக் காட்சியால் சிறிது சிறிதாக இருள் நீங்கி ஒளி கிடைத்துவிடும். இறை வாக்காகிய வேதங்களின் துணைகொண்டு தேடிய பரம்பொருளை நமது உடலிலே கண்டு மகிழ்ச்சி அடையலாம்.

கண்டு கண்டு உள்ளே கருத்து உறவாங்கிடில்
கொண்டு கொண்டு உள்ளே குணம் பல காணலாம்
பண்டு உகந்து எங்கும் பழமறை தேடியை
இன்று கண்டு இங்கே இருக்கலும் ஆமே.

பிராணாயாமப் பயிற்சியை ஒழுங்காகச் செய்கின்றபொழுது மன அடக்கம் ஏற்படும். "எரிகிறதை இழுத்தால் கொதிப்பது நிற்பதுபோல்" மூச்சடக்கம் சிந்திக்கச் சிந்திக்க மனம் அடங்கிவரும். மனம் அடங்கிய நிலையே பிரத்தியாகாரம் எனப்பட்டது. அடங்கிய மனம் ஐந்து நாழிகை வரையில் இறைவனிடம் ஒன்றியிருக்குமானால் அதுவே தாரணை ஆகும். தாரணை பல நாள் சித்திக்குமானால் உச்சிமுதல் உள்ளங் கால்வரை ஆனந்த நீர்பாயும். மனிதனைத் தெய்வமாக மாற்றும் பராசக்தி நமது உடம்பின் உச்சியில் இருக்கிறாள். அவளுடைய கணவனாகிய மகேஸ்வரமூர்த்தி கீழே மூலாதாரத்தில் இருக்கிறான். மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியாகிய மகேஸ்வரமூர்த்தியைப் புருவநடுவில் இருக்கும் பராசக்தியுடன் இணைய வைப்பதே தாரணைப் பயிற்சியினால் ஏற்படும் விளைவு ஆகும். இவ்வாறு குண்டலினி சக்தியை யோக சக்தியாக மாற்றி மேலே கொண்டு செல்பவர்கள் பேரானந்தமயமான அமிர்தத் தைச் சுவைப்பார்கள். இதனை உச்சியில் பிட்சை எடுத்தல் எனச் சித்த புருஷர்கள் கூறுவார்கள். மூலாதாரத்தில் இருக்கும் மூர்த்தியைத் தாரணைப் பயிற்சியால் சிரசின்மீது எழுந்தருளப்பண்ணிப் பராசக்தியுடன் சேருமாறு செய்தால் வயது முதிர்ந்தவனும் இளமை உடையவன் ஆவான் என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகிறது.

மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே

தியானம் என்பது உணர்வும் நினைப்பும் ஒன்றி இருக்கின்ற நிலை ஆகும். ஏதேனும் ஒரு உறுப்பில் மனத்தை ஒருமுகப்படுத்துவது தாரணை எனப்படும். குறிப்பிட்ட உறுப்பொன்றில் மட்டுமல்லாமல் முழுமையிலும் மனத்தை ஒருமுகப்படுத்தி நிறுத்துவது தியானம் ஆகும். தாரணையின் முதிர்ந்த நிலையைத் தியானம் எனலாம். தியான நிலையில் உணர்வுகள் ஆன்மீக மயமாய் இருக்கும். தூய அறிவுச் சுடராய் விளங்கும்

**நியாயம் இருபக்கமும் உண்டு நீதி ஒரு பக்கம்தான் உண்டு.**

புலன்களாற் காணமுடியாத முழுமுதற் பொருளாம் பூரணத்தைத் தியானம் உணர்த்தும்.

சகுணத் தியானம், நிர்க்குணத் தியானம் எனத் தியானம் இருவகைப்படும். சகுணத்தியான நிலையில் இறைவனின் திருவுருவைக் கண்டு மனம் இன்புறும். சகுணத் தியான முதிர்ச்சியில் இறைவன் திரு உரு மறைந்திட மனம் அருவ நிலையில் ஆழ்ந்து ஆனந்தம் கொள்ளும். அருவத் தியானம் சமாதிநிலைக்கு வழிசெய்யும் சகுணத்தியானத்தில் தியானிக்கப்படும் இறையுரு மட்டுமே இன்ப ஊற்றாக இருக்கும். நிர்க்குணத்தியானத்தில் எல்லாவற்றையும் உள்ளடக்கிய முழுமையும் இன்ப ஊற்றாக இருக்கும். எங்கும் இன்பம், எதிலும் இன்பம் என்ற நிலைக்கு நிர்க்குணத் தியானம் கொண்டு செல்லும்.

தியானத்தில் அமர்ந்தபின் கண்கள் இரண்டையும் முற்றாக மூடிவிடாமல் நடு மூக்கில் வைத்தல் வேண்டும். அப்படி வைத்தால் தியானத்துக்கு அது அநுகூலமாக இருக்கும். உடலுக்கு அழிவு வராது. எவ்வித வாட்டமும் அதற்கு ஏற்படாது. மனம் தறிகெட்டு ஓடுவதும் இல்லை. வெளியுலக உணர்வு ஏற்படாது. நான் என்ற அகங்காரமும் அடங்கி நிற்கும். எவ்வித வேட்கையும் தோன்றாது. தேட்டமும் விருப்பமும் இச்சையும் தேடுதலும் இல்லை. இந்த நிலையில் சரத்யா சிவசொருபம் ஆகும்.

நாட்டம் இரண்டும் நடு மூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவனாமே.

மன ஒருமுகப்பாட்டின் இறுதிநிலை சமாதி எனப்படும். தாரணை நிலையில் மனம் புறத்தளவில் ஒருமுகப்பட்டிருக்கும் இந்த ஒருமுகப்பாடு நிலைத்திருக்காது. மன உணர்வுகள் அவ்வப்போது ஒருமுகப்படுவதும் சிதறுவதுமாகவே இருக்கும். தியான நிலையில் ஒருமுகப்பாடு சிதறாமல் தொடர்ந்து நிலைத்திருக்கும். இவ் ஒருமுகப்பாடு மேலும் தீவிரமடைந்து ஆன்மாவைப் பிணைத்திருந்த தத்துவங்கள் அனைத்தையும் அழித்துவிடுகிறது. நான் என்ற தன் முனைப்புச் செயலற்றுப் போகிறது. தத்துவ அழுக்குக்கள் அகன்றுவிடவே ஆன்மா தன்னியல்பான சத் சித் ஆனந்தம் ஆகிறது. இவ்வாறு பக்குவப்பட்ட ஆன்மா பூரணத்திற் கலந்து ஒன்றாகிவிடும் நிலையைச் சமாதி எனலாம்.

உணர்வும் நினைவு மற்று உடம்பை மறந்து இறைபற்றில் ஆழ்ந்திருக்கின்ற யோகநிலை சமாதி எனப்படும். தவத்திலும் தியானத்திலும் ஈடுபட்டவர்களுக்கு சமாதிநிலை எய்துதல் சாத்தியமாகும். உள்ளத்தினுள்ளே சிவன் இருந்தாலும் அவன் வெளிப்படத்தோன்ற உதவுவது தியானமே ஆகும். சிவசிந்தனையில் ஆழ்ந்து தியான யோகத்தில் திளைத்திருப்பவர்களுக்கு மனம் அடங்கி அசைவற்றிருக்கும். தியான யோகத்தில் ஈடுபட்டுச் சமாதிகூடி இருப்பவர்களுக்கு மனவெளியில் ஆண்டவன் அருள் ஊற்றெடுத்துப்பாயும். இறைவனைச் சிந்தையில் நிறுத்தித் தியானிப்பவர்கள் அருளமுதம் உண்டு. திளைக்கும் ஆற்றலைப் பெறுவார்கள். சிவயோக சித்தி பெற்றவர்கள் ஆவார்கள். உடம்புக்குள் அடைத்து வைத்துள்ள பிராணனை அலையவிடாது மூலாதாரத்தில் நிறுத்திச் சிந்தை கலங்காது, மனம் ஒன்றித் தியானம் செய்பவர்களுக்குச்

**சத்தியந் தவறினாலும் பத்தியந் தவறலாகாது.**

சிவனருள் வீட்டுத்தோட்டத்தில் விளைந்த மாம்பழம்போல் வேண்டும் போதெல்லாம் விரும்பியபடி எடுத்துண்ணக்கூடியதாக உதவும். சமாதிநிலை சித்திக்கவே சிவயோகம் கைகூடும்.

தியானத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு மெய்ப்பொருளாகிய சிவனருள் கிட்டும். சிவனருள் கிட்டுவதால் மாது நல்லாளாகிய சக்தியும் சிவத்தோடு பொருந்தி நின்று நல்லருள் புரிவாள். தவமும் தியானமும் கைகூடவே, மனத்திற் குடிகொண்டிருந்த கோபம் தானாகவே அகன்றுவிடும். மனம் அசையாது தராசுமுனை நேராக நிற்பதுபோல சிவசிந்தையில் திளைத்து நிற்கும். இவ்வாறு நிற்கும் நிலையே சமாதிநிலை ஆகும்.

தலைப்பட்டு இருந்திடத் தத்துவம் கூடும்
வலைப்பட்டு இருந்திடும் மாது நல்லாளும்
குலைப்பட்டு இருந்திடும் கோபம் அகலும்
துலைப்பட்டு இருந்திடும் தூங்க வல்லார்க்கே

தியானிக்கிறவனும் தியானமும் அற்றுத் தியானிக்கப்படும் பொருளே தானாக நிற்கும்நிலை சமாதி எனப்படும். சிவனை நினைப்பவன் சிவனாகவே மாறிவிடும் நிலை இதுவாகும். இந்நிலையில் உள்ளபோது ஆகாரம் வேண்டாம். நீரில் மூழ்கிக் கிடந்தாலும் நிலத்திற் புதையுண்டு கிடந்தாலும் உயிர் நீங்காது. சமாதி நிலையில் வல்லவர்கள் எல்லாம் சிவகரணமாய், இன்பநிலையில் என்றும் நிலைத்திருப்பர்.

(தொடரும்...

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| சாமினா இளங்குமரன் | கனடா | 3000. 00 |
| ஆனந்தராசா ஆதவன் | உரும்பராய் | 10000. 00 |
| நா. குணசிங்கம் பொற்பதிவீதி | கோண்டாவில் | 5000. 00 |
| சிறீதரன் குடும்பம் இமையாணன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| இ. கார்த்திகேசு | கொழும்பு | 5000. 00 |
| திரு விக்னராசா | கொழும்பு | 5000. 00 |
| சிவதாசன் சதீசன் சந்நிதி வீதி பத்தமேனி | வரணன் | 2000. 00 |
| சிறீஸ்கந்தராசா இராஜேஸ்வரி | ஜேர்மன் | 1000. 00 |
| சி. முகுந்தன் | இரும்புமதவடி | 10k அரிசி |
| திருமதி பொன்னையா இமையாணன் | உடுப்பிட்டி | 500. 00 |
| S. லோகதாசன் | கனடா | 7000. 00 |
| ஜெ. சந்திரப்பிரகாசம் கல்லூரி வீதி ஆத்தியடி | பருத்தித்துறை | 10000. 00 |
| வ. துரைசிங்கம் அதிபர் | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| ந. தனஞ்சயன் இமையாணன் | உடுப்பிட்டி | 2000. 00 |
| செல்வநாயகம் வசந்தி | ஊரெழு கிழக்கு | 1000. 00 |
| நா. முருகையா உடுவில் கிழக்கு | சுண்ணாகம் | 500. 00 |
| அ. சிவநாதன் | மானிப்பாய் | 3500. 00 |
| க. திருநாவுக்கரசு திபோன்பாபு தச்சுத்தொழிற்சாலை | மானிப்பாய் | 1000. 00 |

(தொடரும்...

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

நமது மதத்தின் விதிகள் எனக்கூறி நமக்கிடையே சாதிப்பாகுபாடுகள், வேள்வி செய்தல் போன்ற பலவற்றை நாம் கடைப்பிடிக்கின்றோம். இறைவன் இவ்விதிகளை வகுக்கவில்லை என்பதை உணர்த்தும் நிகழ்வுகளும் அத்தகைய நிகழ்வுகள் பற்றிய கதைகளும் எமது புராணங்களிலேயே உள்ளன.

அறுபத்துநான்கு நாயன்மார்களின் வரலாறுகளைப் படித்தால் இறைவன் குலபேதம் பார்ப்பதில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்பதைப் புலப்படுத்துவதுபோல பக்திநிறைந்த மனதையே இறைவன் உகந்து குடிகொள்கின்றான்.

வைணவ ஆழ்வார்களின் கதைகளிலும் இதுவே உணர்த்தப்படுகிறது. திருப் பாணாழ்வாரின் கதையை உதாரணத்திற்குக் கூறலாம். திருவரங்கனை ஆராதனை செய்யும் லோகசாரங்க முனிவர், அரங்கனின் திருநீராட்டிற்கு காவிரியில் நீரெடுக்க வந்தார். தன்னை மறந்து பக்தியுடன் பாடிக்கொண்டிருந்த பாணனை விலகுமாறு அவர் கூறியது அவனுக்குக் கேட்கவில்லை. ஒரு கல்லை எடுத்து அவர் வீச அது பாணனின் நெற்றியில் பட்டு இரத்தம் பெருகியது. அவன் முனிவருக்கு வழிவிட்டு ஒதுங்கினான். நீராட்டச் சென்ற முனிவர் அரங்கனின் நெற்றியிலும் குருதி வழிந்தோடு வதைக் கண்டார். மறுநாள் அரங்கன் கனவில் வந்து உத்தரவிட்டபடியே தான் நீர் கொண்டு வரும் வழியிலேகூட நிற்கக்கூடாதவர் எனக் கருதிய திருப்பாணாழ்வாரை தோளிலே சுமந்து திருவரங்கன் முன் கொண்டு சென்றார் லோகசாரங்கமுனிவர். இது திருப்பாணாழ்வாரின் கதை.

வராக புராணத்திலும் இத்தகைய ஒரு கதை கூறப்படுகிறது. அது அடியார்கள் உண்மை பேசுபவர்கள். உயிர்போகும் நிலையிலும் சத்திய நெறியில் நிற்பவர்கள் என்பதையும் சேர்த்துக் கூறுகிறது.

இந்தியாவிலே திருநெல்வேலி மாவட்டத்திலே திருக்குறுங்குடி என்னும் வைணவ திருத்தலம் இருக்கிறது. இதன் சிறப்பை வராகபுராணம் கூறும்போது இக்கதையும் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தலத்திற்கு அருகிலுள்ள மகேந்திரகிரி என்ற மலையின் அடிவாரத்தில் நம்பாடுவான் என்னும் பாணன் வாழ்ந்துவந்தான். அவன் ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகை மாத சுக்கிலபட்ச ஏகாதசியன்று விரதமிருந்து, திருக்குறுங்குடியில் வீற்றிருக்கும் பெருமானைப் பாடித்தொழுவது வழமை.

ஒருமுறை விரதமனுஷ்டித்து திருக்குறுங்குடிக்கு அவன் சென்றுகொண்டிருந்த போது, வழியிலிருந்த காட்டில் ஒரு பிரம்ம ராட்சசன் அவனைப் பிடித்து உண்பதற்கு முற்பட்டான். உடனே நம்பாடுவான் "நான் விரதமிருந்து பெருமாளை வணங்கச் செல்கின்றேன். அவரை வணங்கி மீண்டும் வரும்போது உனக்கு உணவாகின்றேன். இப்போது என்னை விட்டுவிடு" என பிரம்ம ராட்சசனிடம் வேண்டினான். இராட்சசன்

"உன்னை எப்படி நம்புவது?" எனக்கேட்டு அவனை விடமறுத்தான். "திருமாலின் பக்தர்கள் பொய் சொல்லமாட்டார்கள் சொன்ன வாக்குத் தவறமாட்டார்கள். நான் மீண்டும் உன்னிடம் வருவேன்" என நம்பாடுவான் உறுதியளிக்கவே இராட்சசனும் அவனை அனுப்பிவைத்தான்.

"இதுதான் எனது இறுதியாத்திரை போலும்" என்று எண்ணியவாறு நம்பாடுவான் திருக்குறுங்குடிக்குச் சென்று, கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கமாட்டார்களென்பதால் வெளியே நின்று பெருமாளைப் பாடிப்பணிந்தான். "இதுதான் இறுதித் தரிசனம். ஆனால் இறைவனைப் போய்ப்பார்க்க அனுமதிக்கமாட்டார்களே என எண்ணி வருந்தி பாடிக்கொண்டிருந்தபோது எதிரேயிருந்த கொடித்தம்பம் விலகி நம்பாடுவான் மூலவரை வணங்கி வழிபட இடமளித்தது. திருமாலை வணங்கியபின் பிரம்மராட்சசனிடம் நம்பாடுவான் சென்றுகொண்டிருந்தான்.

திருக்குறுங்குடிப் பெருமான் அவனைக் காப்பாற்றச் சித்தங்கொண்டார். ஒரு கிழப்பிராமணனாக அவனெதிரே வந்து "இந்த வழியில் போகாதே. இக்காட்டில் ஒரு பிரம்மராட்சசன் இருக்கிறான். அவன் உன்னைத் தன் இரையாக்கிவிடுவான்" எனக்கூறி அவனைச் செல்லவிடாது தடுத்தார். நம்பாடுவான் முன்பு நடந்தவற்றைக்கூறி அவனது இரையாவதற்காகவே செல்வதாகப் பதிலிறுத்தான். "ஆபத்து ஏற்படும்போது பொய் கூறலாம் எனவே நீ போகவேண்டாம்" என அவர் அறிவுரை கூறினார். "நான் திருமாலின் பக்தன். உயிர் போனாலும் வாக்குத் தவறேன் பொய் கூறேன்" என அவன் உறுதியாக நின்றான். அவர் தன் சுயரூபத்தைக்காட்டி மறைந்தார். திருமாலின் தரிசனத்தால் மகிழ்ந்த அவன் ராட்சசனிடம் சென்றான்.

அங்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. "எனக்குப் பசியே இல்லாது போய்விட்டது. இனிமேலும் பசிவராது போலிருக்கிறது. நீ திருமாலின் பக்தன். உன்னை உண்ண எண்ணியதற்கு மன்னித்துவிடு. எனது இராட்சச வடிவம் போவதற்கு உன் புண்ணியத்தில் கால்பங்காவது கொடு," என பிரம்மராட்சசன் நம்பாடுவானின் கால்களில் வீழ்ந்து இறைஞ்சினான். நம்பாடுவான் அவனை அன்போடு அரவணைத்து "உனக்கு நேர்ந்த தென்ன?" என வினாவினான்.

"நான் யோகசர்மா என்னும் பிராமணன். யாகம் செய்யும்போது ஈடுபாடோ, பக்தியோ இல்லாது செய்ததால் இந்த உருவிலிருக்கிறேன். உனது புண்ணியப் பலனால் எனக்கு இதிலிருந்து விமோசனம் கிடைக்கும்" என பிரம்மராட்சசன் கூறினான். அதற்கு நம்பாடுவான் "திருக்குறுங்குடி நம்பியை கைசிகம் என்ற பண்ணினால் பாடிப்பரவிய பலனில் பாதியை உனக்குத் தருகிறேன்" என்றான். அந்தப் பலனால் யோகசர்மா தனது உருவைப் பெற்றான்.

இக்கதையிலும் யோகசர்மா, நம்பாடுவான் ஆகிய இருவரின் பக்தியின்மை, பக்தி ஆகியவற்றைக்கொண்டே இறைவன் அருள்பாலிப்பதாகக் கூறப்படுவது நோக்கத் தக்கது. குலபேதங்கள் இருக்கு வேதகாலத்தில் காணப்படவில்லை. அதன்பின் உருவாக் கப்பட்டாலும் இறைவன் குலத்தைப் பார்ப்பதில்லை. குணத்தையே பார்க்கின்றான் என்பதை இத்தகைய பல புராணங்களே கூறியுள்ளன.

யானைக்கு அதன் தும்பிக்கைதான் பலம் அதனால்தான் பலவீனத்தையும் தேடிக்கொள்கிறது.

உ

# காளமேகம் கவித்திறன்

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

காளமேகப் புலவரின் கவித்திறனையும், இவருடைய கவிதைகள் காட்டும் பொருள் வளத்தினையும் பற்றி இவருடைய ஒரு சில பாடல்களிலாவது ஆராய முற்படு முன்னர், அவருடைய வரலாற்றினை மிகச்சுருக்கமாகவேனும் தெரிந்து கொள்வது பயனுடையதாகவிருக்கும் இவரது தனிப்பாடல்களில் பக்தியும், நையாண்டியும், சிலேடையும் கலந்திருக்கும். அதனாற்றான் இவரை "நையாண்டிப் புலவர்" எனவும் பலர் அழைத்தனர்.

'காளமேகம்' என்பது இவரது இயற்பெயர் என்று ஒரு சாராரும், 'காளமேகம்' என்பது இவரது கவித்திறமையினால் ஏற்பட்ட காரணப்பெயர் என மறு சாராரும் உரைப்பர். எல்லாப் புலவர்களின் வரலாறுகளிலும் உள்ள வாதப்பிரதிவாதங்கள் இவரது வரலாற்றிலும் உண்டு.

'வரதன்' என்ற பெயர் கொண்ட இவருக்கு திருவரங்கத்து (ஸ்ரீரங்கம்) பெரிய கோயிலில் பரிசாரகர் வேலை கிடைத்தது. மூன்றுவேளை உணவும், சிறிய ஊதியமும் இவருக்கு நிம்மதியான வாழ்வைக் கொடுத்தன.

திருவரங்கம் திருக்கோயில் பிரசித்திபெற்ற ஒரு வைஷ்ணவத் திருத்தலம். அதற்குச் சற்றுத் தொலைவில் உள்ள "திருவானைக்கா" பிரபலமான சிவ ஸ்தலம். இங்கு கோயில் கொண்டிருக்கும் "சம்புகேஸ்வரர்" திரு முன்பாக ஆடிப்பாடித் தொண்டு செய்யும் தேவதாசியர் பலருளர். அவர்களுள் அழகும் இளமையும், இளமைக்கு ஏற்றதான உடற்பூரிப்பும் நடனத்தில் வல்லவளுமான மோகனாங்கியும் ஒருத்தி.

வரதனும் மோகனாங்கியும் காதல் வயப்பட்டனர். தினமும் தனது கோயிற் பணிமுடியவே திருவானைக்கா வந்து மோகனாங்கியை வரதன் சந்தித்து வந்தான். வரதன் ஒரு வைஷ்ணவன். அத்துடன் கோயில் பரிசாரகன் மோகனாங்கி சிவன்கோவில் தேவதாசி. இவர்களது காதற்றொடர்பினைக் கோயில்கள் சார்ந்த வைஷ்ணவர், சைவர் இரு சாராரும் எதிர்த்தனர். மற்றவர்களின் பரிகாசத்தையும் ஏளனத்தையும் தாங்கமுடியாத மோகனாங்கி வரதனைச் சந்திக்க மறுத்தாள். அதனால், மனமுடைந்துபோன வரதன் ஒரு தீர்க்கமான முடிபுக்கு வந்தான். திருவானைக்காக் கோயிலிலேயே சிவ தீட்சைபெற்று, சைவசமயத்தைத் தழுவி, சிவசின்னங்கள் துலங்க தன் காதலி மோகனாங்கியைச் சந்தித்தான். அவளும் மிக்க மகிழ்வோடு அவனை வரவேற்று உபசரித்து இருவரும் இன்புற்று இருந்தனர். அத்துடன் திருவானைக்காக் கோயிலிலேயே பரிசாரகர் வேலையும் கிடைத்ததால், இருவரும் தத்தமது கோயிற் கடமைகளை மகிழ்வோடும் நிறைவோடும் செய்துவரலாயினர்.

ஒருநாள், தன் வேலை முடிந்து, மோகனாங்கியின் வரவுக்காக அம்பாள் "அகிலாண்டேஸ்வரி"யின் மண்டப வாசலில் காத்திருந்த வரதன் அசதியில் தூங்கி விட்டான். அவன் தூங்குவான் என்பதை எதிர்பார்க்காத மோகனாங்கியோ தனியாகவே வீடுபோய்ச் சேர்ந்தாள். கோயில் நிர்வாகிகள் அர்த்த சாமப்பூஜையின் பின்பு கோயிலைப்

பூட்டிவிட்டனர்.

நடுச்சாமநேரம் ஒரு சிறு பெண்ணாக வடிவெடுத்த அம்பாள் "அகிலாண்டேஸ்வரி", வாய் நிறையத் தாம்பூலத்தை மென்றுகொண்டு மெல்ல மெல்ல நடந்துவந்து வரதனைத் தட்டி எழுப்பினாள். திடுக்கிட்டுக் கண்விழித்து எழுந்தான் வரதன். "வாயைத் திற" என்று சிறு பெண் கூறியதும் வரதனின் வாய் தானாகவே திறந்து கொண்டது. மென்றுகொண்டிருந்த தாம்பூலச்சாற்றை அவன் வாயில் அப்படியே உமிழ்ந்துவிட்டு மறைந்துவிட்டாள் சிறு பெண்ணாக வந்த அகிலாண்டேஸ்வரித்தாய். ஒன்றும் புரியாமல் திகைப்படைந்தான் வரதன்.

அடுத்த கணமே, வரதனாகிய பரிசாரகனின் உள்ளத்தில் பெரியதொரு உத்வேகம் எழுந்தது. கடல்மடை திறந்தாற் போன்று அவன் கவிமழை பொழியலானான். தேவியின் கருணையை எண்ணி அவளைப் பாமாலையாற் போற்றினான். பொழுது விடிந்ததும் வீட்டுக்குச்சென்று மோகனாங்கியிடம் நடந்தது அனைத்தையும் கூறவே, அவளும் தேவியின் கருணையை எண்ணி வியந்து நின்றாள். அன்றுமுதல் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பொழியும் "காளமேகம்" ஆனான். தேவியின் கருணைக்கு நன்றி தெரிவித்து "திருவானைக்கா உலா" என்னும் அரிய பிரபந்தத்தைச் சொற்சுவை, பொருட்சுவை மிளிர இயற்றினார். உலாவின் இனிமை அறிவுடையோரை ஆட்கொள்ள அவர், "கவி காளமேகம்" ஆனார்.

மோகனாங்கியுடன் சில காலம் இன்புற்று இருந்த பின்னர், தன் கவித் திறமையைக்காட்ட எண்ணித் தமிழ்நாடு முழுவதும் சுற்றி வந்தார். தஞ்சை மாவட்டம் நாகபட்டினம் அருகே, கடற்கரை ஓரமாகத் "திருமலை நாயக்கன் பட்டினம்" என அன்றும், இன்றும் அழைக்கப்பட்டுவரும் சிற்றூர் ஒன்றுண்டு. அந்த ஊரின் சிற்றரசன் "திருமலை நாயக்கன்" என்பான். (கி.பி. 1455- 1468) தமிழ்ப்புலவர்களை நன்கு ஆதரித்து வந்தான். தன் திறமையைக் காட்டி பொன்னும் பொருளும் பெற எண்ணிய காளமேகம் அங்கு சென்றார்.

அரசவையில் அரசன் அமர்ந்திருக்க, அரசவையின் அறுபத்துநான்கு தண்டிகைப் புலவர்களும் பொறாமை காரணமாக எள்ளிநகையாடி ஏளனம் செய்தனர். அரசனோ இருக்கை எதுவும் கொடாது அவமதித்தான். நிலைமையைப் புரிந்துகொண்ட காளமேகம் தேவி அகிலாண்டேஸ்வரி கோயில் கொண்டிருக்கும் திசைநோக்கி கரம்கூப்பி வணங்கி, தனக்கு ஒரு இருக்கை அருளுமாறு கலைமகளை வேண்டிப்பாடினார்.

அப்போது, மன்னன் திருமலை நாயக்கன் வீற்றிருந்த சிம்மாசனமே ஒரு புறமாக வளர்ந்து பெருகிற்று. பெருகி வளர்ந்த சிம்மாசனத்தின்பால் சென்ற காளமேகம், அரசன் அருகே, கம்பீரமாக அமர்ந்து கொண்டான். இதனைக் கண்ட அரசனும் தண்டிகைப் புலவர்களும் திகைப்படைந்தனர். ஆயினும் அதனை வெளிக்காட்டாமல் இறுமாப்போடு காளமேகத்தைக் கவிபாட அழைத்தனர். ஒவ்வொரு புலவரும் சொன்ன குறிப்பிக்கு ஏற்றபடி போட்டியில் வெற்றிபெற்ற பின்னரும் மன்னன் அவரை அலட்சியப் படுத்தினான். மனம் குமுறிய கவிதையுள்ளம் கனலும் உள்ளமாகி அவ்வூர் அப்படியே அழியுமாறு வசைபாடி வெளியேறினார். மண்மாரி பொழிந்து அந்தச் சிற்றூர் முழுமையாக அழிந்து விட்டதாக வரலாறு கூறுகிறது.

**திருப்தியில்லாத பிச்சைக்காரன் ஆசையுள்ளவன்.**

ஊரெல்லாம் சென்று இறைவனைப் பாடிப்பரவி, தன் கவித்திறமையால் நாடெல்லாம் புகழ் தேடிய காளமேகம் இறுதியில் திருவானைக்கா வந்து சேர்ந்தார். வயது முதிர்ச்சியின் காரணமாகத் தளர்வும் சோர்வும் ஆயினார். தன் கவித் திறமையால் கற்றோரையும் தலைவணங்கிப் போற்றச்செய்த புலவர்பெருமான் ''வசைபாடக் காளமேகம்'' என்றும் ''நையாண்டிப்புலவர்'' என்றும் அழைக்கப்பட்ட தமிழ் வீறுடையார் ஒரு நாள் உடற்கூட்டைவிட்டு நீங்கினார். மோகனாங்கி மட்டுமல்லள், தமிழ்ப் புலவர் உலகமே கதறிக்கண்ணீர் பெருகிற்று.

பக்தி, நையாண்டி, கிண்டல், வசைபாடல் கொண்ட காளமேகத்தின் அருந்தமிழ்த் தனிப்பாடல்கள் சிலவற்றை அடுத்த "ஞானச்சுடர் இதழிலிருந்து தொடர்ந்து பார்க்கலாம்.

(தொடரும்...

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 83ஆவது பிறந்தநாளைச் (07.01.2008) சிறப்பிக்கும் வாழ்த்து

### "ஔவையாம் சைவப்பழம்"

ஆன்மீக வழிநின்று அகிலமதை உய்விக்கும்
அன்னை தமிழ்ச் செல்வியே,
அடியவர் வழிநின்று அம்பாளை வணங்கிடும்
ஔவையாம் சைவப் பழமே,
தேன்பாயு தமிழோடு தெய்வீக சைவமதை
தித்திக்க வளர வைத்தாய்,
தெல்லியூர் துர்க்கா துரந்தரி தங்கம்மா
திண்ணிய ஆயுள் வென்றாய்,
நானென்று ஒருபோதும் எண்ணாத தைமகள்
நாள்தோறும் இயற்றும் அறங்கள்,
நனிநின்று இம்மண்ணை நீடூழி வாழ்விக்கும்
நானிலம் உயர்வாகுமே,
வானின்று வாழ்த்திடும் சூரிய சந்திரன்
வணங்கிடும் சிவபூமியில்,
வருடாந்தம் வருமிந்த பிறந்தநாள் வைபவம்
வல்லமை பெற்று வாழ்க!

*கே. எஸ். எஸ். ராஜா அவர்கள்*

மிகச்சிறந்த மனிதன் அன்புள்ளவன்.

உ

# உள்ளம் படர்ந்த நெறி

சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

"காதல்" என்ற வார்த்தையை உச்சரிக்காத நாக்கு இல்லை. திரும்பும் இடமெல்லாம் ஒலிக்கும் சொல் காதல் எனப்படும். இலக்கியங்கள் காட்டும் காதலும் சமுதாயத்தில் இன்று காணப்படும் காதலும் ஒப்புநோக்கில் பார்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சீரும் சிறப்புடனும் உயர்ந்த குறிக்கோளுடனும் ஒரு சமுதாயம் வாழ வேண்டுமாயின் அவ்வாழ்வில் அமைதி நிறைந்திருத்தல் வேண்டும். அமைதி என்பது புறத்தே இருந்து வருவதன்று. அகத்தே தோன்றுவது. எத்துணை விரும்பினாலும், விலை கொடுக்க முயன்றாலும் சிலருக்கு கிட்டாத இவ்வமைதி ஒரு சிலருக்கு எளிதாகக் கிடைத்து விடுகிறது.

தமிழன் அமைதியை அடைய மிகுதியும் உதவும் ஒரு சூழ்நிலையைக் கண்டான். அதுவே இல்வாழ்க்கை எனப்படும். இதனால் தான் வான்மறை வள்ளுவன் இல்லறம் பற்றிப் பல அதிகாரங்கள் எழுதினான் போலும். இல்லறம் செவ்வன நடைபெற இரண்டு தூய இதயங்களின் அவசியத்தை தமிழ் இலக்கியங்கள் சிறப்பாக கூறியிருக் கிறது. இல்வாழ்க்கையை ஆரம்பிக்க நினைக்கும் இருவருக்கும் தேவையான ஆலோசனைகளை கதைகதையாக தமிழ் இலக்கியங்கள் இயம்பியுள்ளன. இக்கதைகள் கற்பனையாக இருக்கலாம். ஆனால் அவற்றில் பொதிந்துள்ள கருவை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆண்மகன் ஒருவன் அணங்கு ஒருத்தியைக் கண்டுவிட்டான். காதிலே குழை அணிந்த இக் காரிகை யார்? இந்திரலோகத்து அரம்பையர்களில்கூட காணமுடியாத அழகு; அன்னத்தின் நடை, இவள் அழகிய மயிலோ! அல்லது மானிடம் பெண்ணோ! எது என்று அறியமுடியவில்லையே என்று அவன் நெஞ்சம் மயங்க ஆரம்பிக்கின்றது. இதுதான் காதலின் ஆரம்பம். இதனைத்தான் வள்ளுவன்

அணங்கு கொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை
மாதர்கொல்? மாலும் என் நெஞ்சு. -குறள் 1081-

எனக்குறிப்பிடுகிறார்.

இலக்கியங்களில் "காமம்" என்ற சொல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகிறது. காமம் என்பது இன்று ஆளப்படும் பொருளில் அன்று பயன்படவில்லை என்பதனை அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். காமம், காதல் என்பன ஒரே பொருளுடைய சொற்களாகவே பயன்படுத்தப்பட்டன.

வான்மறை வள்ளுவன் ஒருவர் குறிப்பினை ஒருவர் அறிதல் என்பதனை குறிப்பு அறிதல்- எனும் அதிகாரத்தில் குறிப்பிடுகையில் ஒருவரை ஒருவர் பார்த்ததனால் இரு வகைப்பார்வைகள் எழுகின்றன. ஒன்று நோய்தரும் பார்வை மற்றையது அந்நோயினைப் போக்கவல்ல மருந்தாகவுள்ளது. அவளை நான் பார்க்கவில்லைத்தான் ஆனால் அவளோ கடைக்கண்ணால் என்னைப் பார்க்கின்றாளோ! அப் பார்வை தரும்

அதிகபோதை ஊட்டுவது காமம்.

பார்வைக்கு நிகரான இன்பம் உண்டோ? அன்போடு அவள் என்னைப் பார்த்தாள் நானும் பார்த்தேன் அவ்வளவுதான். உடனே தலைகுனிந்தாள். நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும். காதலர் தன்மையை வள்ளுவர் இப்படியாகப் பேசுகின்றார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் காட்டும் காதலைப் பாருங்கள்.

"எண்ண அருநலத்தினாள் இணையள் நின்றுழி
கண்ணொடு கண்இனை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினாள்; அவளும் நோக்கினாள்"

இதுதான் அழகு என்று மனதால் நினைப்பதற்கும் அரிய அழகுடைய சீதையின தும் காகுத்தனினதும் கண்கள் ஒன்றை ஒன்றி "கவ்வி" இருவரது மனவுணர்ச்சியும் ஒன்றுபட்டு உருவான "அகவுணர்வுக்காதல்" தோன்றியது. இன்றைய சமுதாயத்தில் தோன்றும் புறவுணர்வுக் காதலுக்கு அடிப்படை புறத்தோற்றம் மட்டும் தான் என்பது எண்ணற்பாலது. இராமன், சீதை இருவரும் ஒத்த காதல் கொண்டவராயினர் என்று கம்பன் குறிப்பிடுவது ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இவ்வாறு ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்ததால் வரிசிலை அண்ணலும் வாள்- கண் நங்கையும், இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்.

நவீன விஞ்ஞானம் செய்வதற்கு முன்னர் இதயமாற்றுச் சிகிச்சையை கம்பன் உணர்வினால் ஒன்றுபட்டவர்கள் மனதில் மாறிக் குடிகொண்டனர் என்ற அறுவைச் சிகிச்சையை கண் எனும் கருவிகொண்டு செய்துகாட்டி இன்பவாழ்வுக்கு வழிகாட்டி யிருக்கின்றான்.

இவ்வாறாக கருத்தொருமித்த இருவர் காதல் வயப்பட்டுக் காணும் குடும்பம்தான் பல்கலைக்கழகமாக அமையும்.

ஐந்திணை ஐம்பது பாடிய மாறன் பொறையனன் காதல் நெறியைக் காட்டுவதற்கு பிணைமானையும் கலைமானையும் அழகாகக் காட்டுகிறார் பாருங்கள்.

சுணையிற் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்
கள்ளத்தில் ஊஞ்சும்சுரம் என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி

மனதில் மாறிக் குடிகொண்ட காதல் சோடியாகிய இரு மான்களும் தண்ணீர் தாகத்தில் நீர் தேடிச்செல்கிறது. நீர்ச்சுணை ஒன்று கண்ணில் பட்டது. அருகில் சென்றன. சுணையிலோ கையளவு நீர்! இரு மான்களும் தலையை உட்புகுத்திவிட்டன. அப்பொழுது கலைமான் ......ஓ என் காதல் கிழத்தி தாகத்தில் நாவரண்டு இருக்கிறாள் சுணையில் உள்ள நீர் ஒருவருக்குக் கூட போதியதாக இல்லை. நான் நீர் பருகாவிட்டால் பிணைமானும் நீர் பருகாது' என்ன செய்யலாம் இவ்வாறு சிந்தித்த கலைமான் தான் சுணையில் நீர் பருகுவதுபோல ஓசையை எழுப்பியதாம். இதுதான் அகக்காதல் ஏற்படுத்தும் உள்ளம் படர்ந்த காதல் நெறியாகும்.

இப்படியாக உயர்காதல் நெறிக்கு உட்பட்டவர்கள்தான் இல்வாழ்க்கையில் இன்பம் காணமுடியும். இவர்களுக்குத்தான் பொதுமறை இல்வாழ்க்கை என்று தொடங்கி

வாழ்க்கைத்துணைவர், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல் என்று நெறிகளை வகுத்துக்காட்டிச் செல்கிறது. அகக்காதல் சோடிகளினால் மட்டுமே இல்வாழ்வில் இன்பம்காண முடியும் என்பது மிகத் தெளிவாக்கப்பட்டுள்ளது. பொருந்தாத இருவர் அமைக்கும் குடும்பம்தான் நரகமாக இருக்கமுடியும். எனவே சொர்க்கத்தை அடைய விரும்பின் வாழ்க்கைத்துணையை தெரிவதில் கவனமாக இருக்கவேண்டும். "அவசரப்பட்டுத் திருமணம் செய்தவன் சாவகாசமாக இருந்து கண்ணீர் விட வேண்டி வரும்" எனக் கூறப்படுவதின் பொருளை உய்த்துணர்தல் அவசியமாகும்.

"உன் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்று கம்பனின் சீதையினால் கூற முடிந்தது என்றால் அதற்குக் காரணம் இராமனுடன் இதயமாற்றுச்சிகிச்சை செய்து கொண்டதுதான்! இன்றைய நமது சமூகம் கொண்டுள்ள கோட்பாடுகள் அனைத்தும் புறத்துக்குரியதாக இருக்கின்றனவே தவிர அகத்துக்குரியதாக இல்லை. வெள்ளையை விரும்பும் ஒருவனும் கறுப்பை ரசிக்கும் ஒருத்தியும் சம்சார வண்டியில் புறக்காதல் வயப்பட்ட சோடிகளாக கட்டப்படுகையில் வண்டி எப்படி ஓடமுடியும். பெரும் தத்துவ ஞானியாகத் திகழ்ந்த சாக்கிரட்டீஸ் ஒருநாள் வீட்டின் முற்றத்தில் சில இளைஞர்களுடன் வழக்கம்போல தத்துவ உரையாடல் நிகழ்த்திக் கொண்டிருந்தாராம். அப்பொழுது சாக்கிரட்டீஸ்சின் மனைவி பாத்திரங்களை உருட்டிச் சத்தம் ஏற்படுத்தி உரையாடலுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தினார். இதனைப் பார்த்த சாக்கிரட்டீஸ் இளைஞர்களை அழைத்துக் கொண்டு சற்றுத்தூரம் தள்ளி ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து உரையாடலைத் தொடங்கினார். இதனைப் பார்த்த சாக்கிரட்டீஸ்சின் மனைவிக்கு ஆத்திரம் வந்துவிட்டது. இந்த மனுசன் உருப்படாத வேலை செய்துகொண்டிருக்கிறாரே என்று எண்ணிக் கொண்டு பாத்திரத்தில் தண்ணீர் அள்ளிக்கொண்டுபோய் சாக்கிரட்டீஸ்சின்மேல் ஊற்றினாராம். சாக்கிரட்டீஸ் அப்பொழுதும் நிதானமாக அங்கிருந்த இளைஞர்களுக்கு "முற்றத்தில் இடி இடித்தது அதுதான் இப்பொழுது மழை பெய்கிறது" என்றாராம். இந்த மனவுறுதி சாக்கிரட்டீஸ்சுக்குத்தான் இருக்கமுடியும். அந்த மாமேதையின் வாழ்வு பொருந்தாத் திருமணத்தால் துன்பக்கடலில் மூழ்கியிருந்தது. இராமகிருஷ்ணருக்கு பின்னால் சாரதாதேவி அம்மையாரும் மகாத்மா காந்திக்குப் பின்னால் கஸ்தூரிபாயும் இருந்திருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அகவாழ்வு வாழ்ந்தார்கள் என்பது தவிர வேறு காரணமிருக்க முடியாது அல்லவா!

இன்றைய இளைஞர்களே யுவதிகளே காதல் காதல் என்று கூவிச் சென்று சாதல்... சாதல் எனும் முடிவை அடையாதீர்கள். நீங்கள் வாழப்பிறந்தவர்கள் வாழ்க்கையை அனுபவிக்கப்பிறந்தவர்கள். சோகம் உங்கள் முன் தலை காட்டக்கூடாது. தாடி வளர்த்து தேவதாசாக இருக்கப் பாதையைத் தெரிவு செய்யாமல் இலக்கியம் காட்டிய நெறிகளைப் பாருங்கள் அந்நெறிப்படி வாழமுயற்சி செய்யுங்கள்.

**திருப்புகழ் பற்றி.......**

சீராந் திருப்புகழைச் செவ்வேள்மேல் அன்பாக
ஆராய்ந் துரைத்தான் அருணகிரி - நேராக
அந்தப் புகழை அனுதினமும் ஓதாமல்
எந்தப் புகழோது வீர்.

*-வாரியார் சுவாமிகளின் சிறப்புப் பாயிரம்-*

**பிள்ளை என்றிட்டால் பேயும் தாயாம்.**

# முத்திதரும் திருவெம்பாவையின் பல்பரிமாணத் தரிசனம்

துணைவியூர் கேசவன் அவர்கள்

*திருவெம்பாவை பேசும் 'அடியார் இயல்பு':-*

இறைவனது நினைவில் மூழ்கித் தம்மை மறத்தல் அடியாரது இயல்பாகும். முதற்பாட்டிலேயே அடியாரது இவ்வியல்பை "மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய் வீதிவாய்க்கேட்டலுமே, விம்மி விம்மி மெய்மறந்து, போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன், ஏதேனும் ஆகாள் கிடந்தாள்" என அழகாய் விபரிக்கின்றது திருப்பாவை. இறைவனிடம் தங்களை முழுதாய் ஒப்புவிக்கும் அடியார்கள் அவனிடம் மட்டுமன்றி அவனடியார்கள் மீதும் அன்பும் மதிப்பும் உடையோராவர். "உன்னைப் பிரானாகப்பெற்ற உன் சீரடியோம், உன்னடியார்தாள் பணிவோம். ஆங்கவர்க்கே பாங்காவோம்" என வாக்குமூலந் தருகின்றனர். அதேவேளை இறையடியவர்களே தம்மைச் சுற்றியிருக்கவேண்டும் என்ற விருப்பமும் அவர்களுக்கிருப்பது (உன்னடியாரே) "அன்னவரே எங்கணவராவார்" என்பதிலிருந்து வெளிப்படுகின்றது. இறைபணியல்லாது வேறு எப்பணியுஞ் செய்யாதிருக்கும் விருப்பும் உறுதியுங்கொண்டவர்களாகவே அடியார்கள் திகழ்கின்றனர். "எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க; எங்கை உனக்கல்லாது எப்பணியுஞ் செய்யற்க; கங்குல் பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க" எனும் அடிகள் அடியாரது உறுதியை வெளிப்படுத்துகின்றன. சிவனடியார்களையும் சிவனாய் வழிபடுகின்ற 'சங்கம' வழிபாட்டு மரபு எமது சமயத்தில் தொன்றுதொட்டு வந்ததாகும். இவ்வகையில் அடியார்தம் சிறப்பையும் இயல்பையுங்கூட திருவெம்பாவை பேசத் தவறவில்லை என்பதை உணரமுடிகின்றது.

*'ஆழ்ந்திருக்கும் கவிப்பொருள்':-*

மணிவாசகரின் இப்படைப்பு பக்தியனுபவத்தை ஏற்படுத்துவதாக, இறைவனது கீர்த்தியைப் பேசுவதாக, சடங்குசார் நிகழ்வுகளைத் தருவதாக அமைந்திருந்தாலும், அவை உணர்த்தும் செய்தி ஆழமானது. துயிலிற் கிடக்கும் தோழியைத் துயிலெழுப்பி நீராட அழைத்துச் செல்வதாய் இப்பாடல்கள் அமைகின்றன. ஆனால் அவை உண்மையில் துயிலெழுப்ப முனைவது அறியாமையாம் இருளில் அழுந்திக்கிடக்கும் எம் ஆன்மாவையே ஆகும். பக்குவம் முதிர்ந்த ஆன்மா, மலஇருளில் (மலம் என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள்) அழுந்திக் கிடக்கும் பக்குவம் பெறாத ஆன்மாவை எழுப்பி இறைவனது அருள்நீரில் திளைப்பதற்கு அழைத்துச் செல்வதாகவே இப்பாடல்கள் அமைவதாய் அறிஞர்கள் தத்துவப்பொருள் கொள்வர் என்றும், "மலவிருளுற்றுறங்காமல் மன்னுபரிபாகரருள் செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை" என்கிறது திருப்பெருந்துறைப் புராணம் என்றும் முதற் கட்டுரையிலேயே கண்டோம்.

இப்பாடல்கள் ஒவ்வொன்றும் வெளிப்படையாய் ஒரு கருத்தை உணர்த்தினாலும் அவற்றில் ஆழ்ந்து மறைந்து கிடக்கும் மற்றொரு கருத்து நுணுகிக் கற்பார்க்கு

விருந்தாகிறது. உதாரணமாக, "அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்" எனும் பாடல், இறைவனது திருப்பாதங்களின் முன் தேவர்களின் முடியிலுள்ள இரத்தினங்கள் ஒளியிழப்பதாக வெளிப்படையாகப் பேசினாலும், 'மெஞ்ஞானத்தின் முன் அஞ்ஞானம்' நின்று பிடிக்க முடியாமல் வலுவிழக்கும் என்ற செய்தியை தன்னுள் பொதித்து நிற்கின்றது. அதேபோலவே "மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்...." எனும் பாடல், தெளிவற்றவர்களும் ஒருமுகப்படாதவர்களும் இறைவனைத் தரிசிக்கமுடியாது என்பதையே உணர்த்திநிற்பதாக முன்னர் கண்டோம். இவ்வாறே ஒவ்வொரு பாடலும் தன்னகத்தே 'புதையல்களை'க் கொண்டிருக்கின்றது. இவையெல்லாம் மும்மலங்களாம் மாயவிருளிலிருந்து எம்மை 'ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி'யை நோக்கி நகர்த்தவல்லன.

*இலக்கிய நயமிக்க படைப்பு:-*

இறைவழிபாட்டுச் செய்திகளை உணர்வுபூர்வமாகத் தரும் திருவெம்பாவைப் பாடல்கள் இலக்கியச் செழுமைமிக்க பொக்கிஷங்களாகவுந் திகழ்கின்றன. 'பைங்குவளைக் கார்மலரால்' எனத்தொடங்கும் பாடல் நீராட நாடும் பொய்கையை சிவனாயும் சக்தியாயும் சித்திரிக்கின்றது. 'குருகு' என்ற சொல்லிற்கு வளையல்- பறவை என்றும் 'அரவம்' என்ற சொல்லிற்கு பாம்பு- ஒலி- என்றும் இருவேறு பொருள் கொண்டு 'அம்மை அப்பனது' கோலமாய் பொய்கையை புனைந்துரைப்பதானது நயமிக்கதாய் அமைகின்றது. அவ்வாறே "முன்னிக் கடலைச் சுருக்கி...." என்ற பாடலில் மழைக்காட்சியொன்றை அம்மையின் வடிவத்தோடு ஒப்பிட்டுப் பேசும் நயத்தைக் கண்டோம். இலக்கியச் சிறப்புமிக்க திருவெம்பாவைப் பாடல்களின் 'சிகரமாய்' அமைவது "அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்..." என்ற பதினெட்டாவது பாடலாகும். காலையின் புலர்வைக் குறிப்பதாகப் பாடலமைக்கும் 'கவிஞர்' சூரியனது வரவால் நட்சத்திரங்கள் மங்கி மறையும் காட்சியைப் பேசுகிறார். எவ்வாறெனின் இறைவனது பாதத்தைப் பணிகின்ற தேவர்களுடைய கிரீடத்திலுள்ள இரத்தினத் தொகுதிகள் இறைவனது திருப்பாதங்களின் பிரகாசத்தின் முன் ஒளியிழப்பதைப்போல சூரியனது வரவால் நட்சத்திரங்கள் ஒளியிழப்பதாய் உவமையால் சுவைபடப்பேசுகிறார். 'உவமை' என்பதென்ன? தெரிந்த பொருளைக்கொண்டு தெரியாத பொருளை விளக்கல். ஆனால் இங்கோ மறுதலையாய் தெரியாப் பொருளைக் கொண்டு தெரிந்த பொருளைப்பேசி, 'தெரியாப் பொருளின்' சிறப்பை நமக்குணர்த்தி நயக்கவைக்கும் திறத்தை வியக்கின்றோம்.

தமிழிலக்கியப் பரப்பில் பக்திசார் இலக்கியங்களுக்கு பிரதான இடமுண்டு. அவற்றுள் 'திருவாசகம்' என்பது சிறப்புவாய்ந்த ஒன்றாகும். அப்பொக்கிஷமாம் திருவாசகத்துள் ஒன்றாயமையும். 'திருவெம்பாவை' மக்களுக்கு மிகவும் பரிட்சயமான தொன்றாகவும் இரசனைக்குரியதொன்றாகவும் அமைகின்றமை தெளிவு. திருவாசகப் பாடல்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றான ஆழ்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தன்மையை இங்கும் கண்டு சிலிர்க்கின்றோம். "பாவை நோன்பு" என்னுஞ் சடங்கிற்குச் சாட்சியாயும், ஆன்மீக நாடிகளுக்கு வழிகாட்டியாயும், இலக்கியச்

சுவைஞர்களுக்கு நல்விருந்தாயும் அமையும் திருவெம்பாவைப் பாடல்கள், கற்றோரை வியப்பிலாழ்த்திக் களிப்புறவைத்து நல்வழிப்படுத்தும் இயல்புடையதாய் அமைவன. திருவாசகத்தேனின் ஒரு துளியாய் இம் 'மலவிருளகற்றுந் திருவெம்பாவை'யைச் சுவைத்தோம். அதன் சுவையை மாந்திக்களித்தோம். அவன் நினைவில் திளைத்தோம். 'அவனருளால்' விளைந்ததிது.

(முற்றும்)

## மறுமை தேடி...

ஆன்மீகம் வளர்த்தெடுத்து
ஞானம் கொண்டவர்கள்....
ஞாலம் வாழ்வதற்குத்
தம்மைக் கொடுத்திடும்
உயரிய பண்பு கொண்டவர்கள்
உலகில ருகினரோ...
உள்ள மிறுகினரோ....?
பண்பு மறந்தார்
அன்பைப் புதைத்தார்.... இன்று
ஆண்டவன் பாதங்களை
ஏளனம் செய்தார்
அதனால் தானே
அகில மின்று
இடிந்தே போகிறது
பொய்ம்மை வாழ்வை
மெய்ம்மை யென்றே - இன்று
மாந்தர் வாழ்வதால்,
வாழ்ந்த பின்பு
அழிந்தே போய்விடும்
நரகம் கொள்கிறார்
வீழ்ந்த பின்பும்
புகழ் விஞ்ச
வாழும் வாழ்க்கை
இருப்பதை யுணர்ந்தே
நல்வழி வாழ்ந்தால்
நாளும் மகிழ்வு!!

*திரு சி. மதியழகன் அவர்கள்*

நதிகள் யாவும் தாய்மைக்குணம் உள்ளவை.

உ

# மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டும் மார்கழித் திருவெம்பாவை

காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

ஞானப்பனுவல் அறிவால் சிவனேயானவர் மணிவாச்கர். காதலாகிக் கசிந்து கண்ணீர் நல்கிப் பாடியுள்ள வாதவூரரின் வண்மைத் தமிழ் ஆணவமல வெப்பத்தைத் தணிக்கும் அருள்மழை. பிறவிப்பிணி தீர்க்கும் பெருமருந்து அத்திருவாசகத்தின் சிறப்பான ஒரு பகுதியே திருவெம்பாவை.

காத்யாயனி விரதம் என்று பாகவதத்தில் பேசப்படும் இந்தப் பாவைநோன்பு உமையம்மையை நோக்கிச் செய்யப்பட்டது. எனவே, இது "சக்தியை வியந்தது!" ஆன்மாவை விழிக்கச் செய்யும் பரிபக்குவரின் பேச்சே பாவைப்பாடல்களாகும்.

"செருப்புக் கன்றெடுத்த சேணுயிர் நெடுங்கொடி வரிப்புனை பந்தொடு பாவை தூங்க" எனும் திருமுருகாற்றுப்படை அடியில் இச்சொல் நூலால் வரிந்து புனையப்பட்ட பாவை என்ற பொருளில் வருகிறது.

"திருவெம்பாவை" என்பதில் "திரு" என்பது மேன்மையையும் "எம்" என்பது உயிரையும் "பாவை" என்பது வழிபாட்டிற்கு அமைந்த திருவுருவையும் சுட்டின. பாவாய் என்ற விளியை வழிபடும் உருவத்தை அழைப்பதாகவும் பாவைநோன்பு நோற்கும் பெண்களை அழைப்பதாகவும் கொள்ளலாம்.

*திருவெம்பாவை:-*

சிவன் என்ற சொல் செந்நிறமுடையவன் என்று பொருள்படும். சிவன் மூவருக்கும் மேலான முழுமுதற் கடவுள். சைவசித்தாந்தப்படி இறைவன் பிறப்பற்றவன். இதையே "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி" என்பதாகச் சுட்டுகிறார் மணிவாசகர். சிவபெருமான் ஒருவனே முதல்வனாக அழியாப் பொருளாக நிலைபெற்றுப் பின் படைப்பாகியத் தொழில் செய்தற்கு நாததத்துவத்தை எழுப்பி நிற்பவன் என்பது சைவர்களது கொள்கை இதையே "ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன்" என்பதால் உணர்த்துகிறார்.

சிவபெருமான் அனைவருக்கும் தலைவன் என்பதை "மாலறியா நான்முகனும் காணாமலை" "அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும் விண்ணோர்" என்ற அடிகள் உணர்த்துகின்றன.

திருவெம்பாவையில் இறைவனின் பெருமைகூறி மலம் நீங்கப்பெற்ற உயிர்கள் இறைவனை அடைவதையே கருத்தாகக் கொண்டு அதனடிப்படையிலேயே ஒவ்வொரு பாடலையும் மணிவாசகர் அமைத்துள்ளார்.

திருவெம்பாவையில் முதலில் துயிலெழுப்புதல் பின் நீராடுதல், இறைவனைப் போற்றித் தன் வேண்டுதலை இறைவனிடம் கூறல்போன்ற நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இறுதியில் இறைவனைப் போற்றிப் பாடுகின்றனர்.

துயிலெழுந்து வரும் கன்னியர்களை இறைவன் பெருமையும் அருளையும்

நன்குணர்ந்துவரும் நன்மக்களாகவும், நீர்த்துறையை இறைவன் அருள் நிலையமாகவும், அதில் நீராடி இன்புறுவதை திருவருளில் தோய்ந்து இன்புறுவதாகவும் கூறுவர். ஞாயிற்றின் நல்லொளி கண்டு மகளிர் நீராடுவதுபோன்று இறைவனது அருளொளி தோன்றக்கண்டு நன்மக்கள் அதன் இன்பத்தில் மூழ்குவரெனினும் மகளிர் தம்மை தலைவன் கையில் அகப்படுவதுபோல் உலக மக்கள் தம்மை இறையருட்டு உரிமை செய்கின்றாள் என்றும் கூறுவர்.

ஒரு இல்லத்து வாசலில் நிற்கின்ற மற்றப் பெண்கள் உள்ளே இருப்பவளை "ஒளி பொருந்திய பெரிய நீண்ட கண்களையுடையவளே" என்றழைக்கின்றனர்.

*"வாள் தடங்கண் மாதே"*

எவ்வுயிர்க்கும் தோற்றமாய் ஈறாய்த் தோற்றமும் ஈறும் இல்லாதானாய் இருக்கும் அரும் பெருஞ் சோதி வடிவானவனை யாம் பாடக் கேட்டும் நீ உறங்குகிறாய்? அருட் சோதிவடிவான அண்ணாமலையான் அவன். அவனையாம் அறிந்த அளவு பாடிக் குளிர் நீங்கி, உன் வாசலில் வந்து நிற்க நீ உறங்குவது அழகா? இது பொய்யுறக்கமா? உன் செவி வன்செவியா? கேட்காதா உன் காது?

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்?

இவ்வாறாக திருவெம்பாவை ஒவ்வொரு பாடலும் துயில் எழுப்பவந்த பெண் களுக்கும் வீட்டினுள்ளே இருக்கும் பெண்களுக்குமிடையே நிகழ்ந்த உரையாடல் பாங்கிலே அமைந்து காணப்படுவதையும் பார்க்கலாம்.

## நடராஜருக்கு 6 மஹா அபிஷேகங்கள்

ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு ஓர் ஆண்டுக்கு 6 முறை மஹா அபிஷேகம் நடைபெறுகிறது.

மாசி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசி
சித்திரை மாதத்தில் திருவோண நட்சத்திரம்
ஆனி மாதத்தில் உத்தர நட்சத்திரம்
ஆவணி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசி
புரட்டாதி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசி
மார்கழி மாதத்து திருவாதிரை நட்சத்திரம்

இதில் ஆனி மாதத்து உத்தரத்து அன்றும், மார்கழி திருவாதிரையன்றும் அதிகாலையில் நடைபெறும் மஹா அபிஷேகங்கள் மிகச்சிறப்பு வாய்ந்தவை.

எவன் ஒருவனுக்கு தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.

நீ எதையும் சாதிக்கமுடியும். அளவுகடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாதபோதுதான் தோல்வி அடைகின்றாய்.

*சுவாமி விவேகானந்தர்.*

உ

# மேசை ஒரு பாஷை

**திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்**

எல்லாம் வல்ல இறைவன் தந்த மொழியாக மேற்படி கூற்றினை எடுத்துக் கொள்வோம். அவ்வாறாயின், அதிற் பொதிந்துள்ள செய்திதான் என்ன? அவரவர் கடமையை அவரவர் செய்வதுதான். அவரவர் கடமையை அவரவர் செய்யாவிடின் என்ன நடக்கும்? எல்லாமே தளம்பும். எல்லாமே குழம்பும். அவ்வாறாயின் யார் பாதிக்கப்படுவார்கள்? சம்பந்தப்பட்டவர்கள் அனைவருமே. இந்நிலையில் யாது நடக்க வாய்ப்புண்டு! தெய்வத்தின் திருவருள் கைகூடவே சாத்தியமுண்டு. அவ்வாறெனின் ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் கடமையை ஆற்றுபவர்களுக்கு யாது கைகூடும்? "தான் யார் என்பதை அறிந்து நடக்கக்கூடிய பக்குவம், பண்பு, பாங்கினை மட்டும் தருவதோடமையாமல் இறைவன் சகல பேறுகளையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தந்திடுவான் என்ற உலக வாழ்விலே ஒரு பிடிப்பு உண்டாகும்". அந்தப் பிடிப்புத்தான் நமது படிப்பு. அந்தப் படிப்புத் தருகின்ற மேசை எங்கு இருக்கிறது? ஒவ்வொருவர் வீட்டிலும், வேலைத்தளத்திலும், வியாபாரத் தளங்களிலும், ஆன்மீக பீடங்களிலும் உண்டு. அதனை அறிவோமாக.

வீட்டிலே அம்மா, அப்பா, பிள்ளைகள் என ஒவ்வொருவருக்கும் ஒரு மேசையோ அல்லது பொதுவான ஒரு மேசையோ இருக்கிறதாக வைத்துக்கொள்வோம். (மேசை என்ற ஒரு பொருள் இல்லாத வீடும் உண்டு என நாம் உணர்ந்துகொள்ளுதல் அவசியம். அந்த நிலையில் வீட்டுப்படலை அல்லது வீட்டுவாயில் ஒரு செய்தியைச் சொல்லிக்கொண்டே இருக்கும். அந்தப் படலையில் ஆண்டவன் சிலவேளைகளில் தட்டுவதும் உண்டு திறப்பதும் உண்டு) ஆம்! அம்மாவின் மேசை ஆரோக்கியத்தையும், அரவணைப்பையும், ஆன்மீகத்தையும், ஆகாரத்தையும் வழங்குவதாக இருக்கவேண்டும். மேலதிகமாக ஒரு பிரார்த்தனைப் புத்தகத்தையும் வைத்துக்கொண்டால் அம்மாவை விட வேறு கோவில் இருக்க முடியாது.

அப்பாவின் மேசை என்று சொல்லும்போது உலகமே அதில் இருக்க வேண்டும். நாட்குறிப்பேடு (டயறி) தொடக்கம், நற்சிந்தனைவரை நானாவிதப் புத்தகங்களனைத்தும் நிரம்பியும், நேர்த்தியாகவும் இருக்கவேண்டும். அப்பா ஒரு நூல்நிலையம். பிள்ளைகளின் மேசை அப்பா, அம்மாவின் மேசைகளை அனுசரிக்கும், அதேவேளை தாம் சார்ந்த பாடவிதானங்களை இலட்சியப்படுத்துவனவாய் மிளிரவேண்டும். இம்மூன்று மேசைகளும் நல்ல செய்திகளை மொழிகின்ற பாஷையாக அமையும். எல்லா வீடுகளிலும் மேசை ஒன்றாவது இருக்கும். அப்பாவின் மேசையில் எந்தப்புத்தகம் அல்லது எந்தப் பத்திரிகை இருக்கிறதோ அதுதான் வீட்டினது செய்தியாக இருக்கும். மாறாக ஒரு ஆபாசப்படம் இருக்குமாயின் அந்த வீடும் அதுவாகவேயிருக்கும்.

வேலைத்தளங்களில், நிர்வாக பீடங்களில் உள்ள மேசைகள், சம்பந்தப்பட்ட இலக்குக்களையடைவதான எண்ணக்கருக்களையோ, கோவைகளையோ, அல்லது சம்பந்தப்பட்ட சகபாடிகளையோ கொண்டிருக்குமாயின் வல்லமை கொண்டதாக

இருக்கும். தவிர சம்பந்தமில்லாதவர்கள் கலந்துரையாடக் கூடியதான, ஆற அமர இருந்து உண்டு செல்லக்கூடியதான, அல்லாத வேலைகளை வலிந்து இழுத்து இலாபம் தேடக்கூடியதான, கடமை நேரத்தை உதாசீனம் செய்யக்கூடியதான தனிப்பட்ட செய்திகளை விமர்சிக்கின்ற, நெளிவுசுழிவுகளைச் சிலாகிக்கின்ற மேசையாக இருக்கு மாயின் சம்பந்தப்பட்ட நிர்வாகம் எப்படி இருக்கும்? ஆனால் பிழையென்று ஒருபோதுமே ஒத்துக்கொள்ளமாட்டார்கள். சரியென்று வாதாடுவார்கள். சரி என்று சொல்வதற்காக ஏராளமான சன்மானங்களை வழங்குவார்கள். அல்லது தொலைபேசியில் சும்மாவா விடுவார்கள்! அவரைத்தெரியும், இவரைத் தெரியும். முடிவில் அடிக்காமல் அடித்து விடுவார்கள். அடிமையாக்கி விடுவார்கள். இவ்வாறான மேசைகளையும் அங்கொன்று இங்கொன்றாகப் பார்க்கின்றோம். இங்குதான் அவரவர் ஆற்றவேண்டிய கடமை, கச்சிதமாக நலிவுடைய ஏனையோர்க்குத் திணிக்கப்படுகிறது. இறைவனும் ஒவ்வொருவரைப் பற்றியும், ஒவ்வொரு மேசையைப் பற்றியும் ஒவ்வொரு நாளாகக் குறிப்பெடுத்து வருகின்றான்.

ஒரு பாடசாலையில் ஐந்நூறு மாணவர்கள் கற்கிறார்கள் என வைத்துக் கொண்டால், அந்த ஐந்நூறு மாணவர்களுக்கும் கல்விக்கான தீனி கிடைக்கிறதா என்று தினம் தினம், கணம் கணம் அவதானிக்கக்கூடிய மேசை ஒன்றல்ல, இரண்டல்ல, சம்பந்தப்பட்ட பதவிகளை அலங்கரிப்பவர்களின் மேசைகள் விழித்திருக்க வேண்டும். அவ்வாறு விழித்திருந்தால் அதுவே ஒரு பாஷையாகிறது.

வியாபாரத்தளங்களில் நேர்த்தியான வரவேற்பும், சீரான அளவீடுகளும், தரமான பொருட்களும், பொருத்தமான விலைகளும் வழங்கக்கூடிய மேசைக்காக நுகர்வோர்கள் காத்திருப்பார்களாயின் அதுவே அவர்களின் இலாபமாகும்.

ஆன்மீக பீடங்களில் உள்ள மேசையானது, தெய்வீக ஒளிபரப்பும் தர்ம சிந்தனைகளை வளர்க்கும் செய்திகளையும், ஆரோக்கியத்தையும், ஆறுதலையும், வணக்கத்தையும் கொண்டிருக்குமாயின் அடியவர்கள் பாக்கியவான்களேயாவர். (உதாரணம்- சந்நிதியான் ஆச்சிரம மேசை) ஒரு மாணவன் நாற்பது நிமிடங்கள் பொறுமையாக ஒரு நாற்காலியில் இருந்து, கற்பானாக இருந்தால் அந்த மாணவனின் மேசை அவனை வெல்லவைக்கும்! எப்படி? அந்த மேசையும், ஏனைய மேசைகளும் இணைந்து சம்பந்தப்பட்ட மாணவனை ஆசீர்வதிக்கும்- என்பதே அந்த உண்மையாகும்.

ஆதலால், மேசை என்பது ஓர் உயிருள்ள பொருள். ஒவ்வொரு மேசையும் பூஜைக்கும் ஆராதனைக்கும் உரியதாகும். அந்த மேசையைக் கையாள்பவர் அதற்குரிய பாஷையைப் புரிந்துகொள்ளவேண்டும். புரிந்து கொள்ளாவிடின் அவரது கடமை வரட்சியாகிவிடும். மாறாகத் தான் பொறுப்பேற்ற மேசையை விட்டு விலகி நடக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் எல்லாம் வல்ல இறைவன் தனது மேசையில் இருக்கும் நாட்குறிப்பேட்டில் மறக்காமல் எழுதிய வண்ணம் உள்ளான் என்பதை யாம் மறவாமல் இருந்தால், சம்பந்தப்பட்ட மேசைகளை உயிரோட்டமான பாஷையாகக் காலம் ஆவணப்படுத்தும் என்பதனை நாம் உணர்வோமாக. இனி மேசையே பேசுவதாக.

நாக்கு மூன்றங்குல நீளம். ஆனால் அதை அடக்கி ஆளாவிட்டால் ஆறடி உயரமுள்ள மனிதனைக் கொன்றுவிடும்.

புத்தகங்களையும் பெண்களையும் அடிக்கடி கவனித்தல் வேண்டும்.

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



கதிர்காமக்கந்தனது அழைப்புக்கிடைக்கின்ற அடியார்களே அவனது அழைப் புக்கிடைக்கின்றபொழுது அங்கே சென்று அவனது திருவருளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய பாக்கியத்தை பெற்றுக்கொள்கின்றனர் என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் அன்று தொடக்கம் நிலவிவருகிறது. 2006ஆம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தி லிருந்து புறப்பட்ட எமது கதிர்காம யாத்திரை பற்றிய தொடர்கட்டுரையின் இறுதிப் பகுதியை அடியார்கள் கொண்டுள்ள இந்த நம்பிக்கையுடன் தொடர்புபடுத்தி நாம் நிறைவு செய்திருந்தோம்.

கதிர்காமக்கந்தனுடன் தொடர்புடைய வாசகர்கள் இந்த நம்பிக்கையை தங்களின் தனிப்பட்ட அனுபவத்துடன் தொடர்புபடுத்தி சிந்திப்பார்கள் என்றே நாம் நம்புகின்றோம். இதேநேரம் 2006ஆம் ஆண்டு எமது யாத்திரையில் பங்குபற்றிய ஒரு அன்பரது தனிப் பட்ட அனுபவத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கு வெளிப்படுத்துவது பொருத்தமானதென்று கருதுகின்றோம்.

2006ஆம் ஆண்டு நாம் மேற்கொண்ட கதிர்காம யாத்திரையில் பலவகைப்பட்ட அடியார்கள் பங்குபற்றினார்கள் எனவும் அதில் சமயச் சொற்பொழிவாளர் ஒருவரும் இடம்பெற்றிருந்தது பற்றியும் நாம் குறிப்பிட்டிருந்தோம். யாழ் குடாநாட்டில் நீண்டகால

மாக பல பிரதேசங்களுக்குச்சென்று சொற்பொழிவுகள் நடாத்தி பலராலும் அறியப் பட்ட ஒரு சிறந்த சமயப்பெரியவராக அவர் வாழ்ந்துவருகின்றார். வாரியார் வாரிசு என்ற சிறப்புப்பட்டம் உட்பட பல்வேறு பட்டங்களைப்பெற்ற காங்கேசன்துறையைச் சேர்ந்த சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்களே அந்தப் பெரியாராவார். எமது ஞானச்சுடர் சஞ்சிகையில் "மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்" என்ற தலைப்பில் தொடராக நூறு கட்டுரைகள் எழுதி மாகாபாரத காவியத்தை வாசகர்கள் மனதில் பதியவைத்த பெருமைக்குரிய பெரியவராகவும் அவர் கருதப் படுகின்றார்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை தமது குலதெய்வமாக வணங்கிவருவதும் மட்டுமன்றி அவனுக்கு தான் அடிமை என்று கருதி வாழ்ந்து வருகின்ற அன்பராகவும் திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள் விளங்குகிறார்கள். இத்தகைய இயல்புகளையுள்ள வ. குமராசாமி ஐயர் 2006ஆம் ஆண்டு ஒரு வெள்ளிக்கிழமை வழமைபோல சந்நிதி யானிடம் வந்து அவனை மனமுருகி வழிபட்டு மனநிறைவு அடைந்தார். அதன்பின் ஆச்சிரமத்திற்குச் சென்று ஆச்சிரமத்தின் சுவாமிகளையும் சந்தித்தார்கள். ஆச்சிரமத்தின் சுவாமிகளும் அவரை இன்முகத்துடன் வரவேற்று வழமைபோல அவருக்குரிய கௌரவத்தை வழங்கி அவருடன் மனம்விட்டு உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

அவ்வாறான உரையாடலின்பொழுது ஆச்சிரமத்தின் சுவாமிகள் நாங்கள் நாளைய தினம் கோயிலடியில் இருக்கின்றவர்களையும் அழைத்துக்கொண்டு கதிர்காம யாத்திரை புறப்படப்போகிறோம். நீங்களும் விரும்பினால் எங்களுடன் வாருங்கள் ஐயா என கதிர்காம யாத்திரை தொடர்பாக தனது மனதின் வெளிப்பட்ட உணர்வினை குமாரசாமி ஐயர் அவர்களுக்கு ஆச்சிரமத்தின் சுவாமிகள் வெளிப்படுத்தினார்கள்.

சுவாமிகள் வெளிப்படுத்திய இந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது திரு குமாரசாமி ஐயர் அவர்களுக்கு மின்னல் ஒளி வெளிப்படுவதைப்போன்று அவரது உள்ளத்தில் திடீரென ஒரு உணர்வு தோன்றியது. ஆம் 60 வயதைத் தாண்டிவிட்ட நிலையிலும் முருகபக்தனாக வாழ்ந்துவருகின்ற பொழுதும் இதுவரையில் கதிர்காமம் செல்லவேண்டும் என்பதுபற்றி தீவிரமான விருப்பமோ அல்லது இது பற்றி சிந்தனையோ அவர் கொண்டிருந்ததில்லை. ஆனால் தற்பொழுது குமாரசாமி ஐயர் அவர்கள் கதிர்காம யாத்திரைக்கு செல்வதற்குரிய முடிவை கட்டாயம் எடுக்கவேண்டிய சூழ் நிலைக்கு ஆளாகிவிட்டார். அதுமட்டுமல்ல இந்தக் கதிர்காம யாத்திரை தொடர்பாக வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத அளவுக்கு அவரது உள்ளமும் உடலும் பக்தி என்ற இன்ப உணர்வினால் உறைந்துபோய்விட்டதையும் அவர் உணர்ந்து கொண்டார். ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனுடைய அருளிற்கு பாத்திரமாகி தனது உடல் பொருள் ஆவி அனைத்தாலும் அவனுக்கு அடிமையாகிவிட்ட நிலையில் தற்பொழுது கதிர்காமக்கந்தனால் நடாத்தப்படுகின்ற திருவிளையாடலையும் அனுபவத்தால் உணர்ந்து கொண்ட நிலையிலேயே அவரது உள்ளமும் உடலும் உறைந்து போகின்ற அந்த

இன்ப உணர்விற்கு அவர் ஆளாகவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆம் கதிர்காமக்கந்தன் மேற்கொண்ட திருவிளையாடலினால் குமாரசாமி ஐயர் அவர்கள் ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கு "நானும் கதிர்காம யாத்திரைக்கு வருகிறேன்" என்ற தனது சம்மதத்தை அன்றைக்கே அப்பொழுதே தெரிவித்து அடுத்தநாள் காலையில் கதிர்காம யாத்திரையில் இணைந்து கொள்வதற்கு ஆயத்தமாக சகல ஆயத்தங்களுடனும் ஆச்சிரமத்திற்கு வந்துசேரவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். .

அதுமட்டுமல்ல குமாரசாமி ஐயர் அவர்கள் கதிர்காமம் செல்வது தொடர்பான தனது திடீர் முடிவை தனது துணைவியாரிடம் தெரியப்படுத்துவதும் அதுவும் தனது உடல்நிலை திருப்தியில்லாத நிலையில் தனது மனைவியிடம் கதிர்காம யாத்திரைக்கான அனுமதியைப்பெறுவதென்பதுகூட இலகுவான விடயமல்ல என்பதும் சிவத்திரு குமார சாமி ஐயர் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. ஆனாலும் இந்த நிலைமைகளை எல்லாம்மீறி அவர் எப்படியும் கதிர்காம யாத்திரையை தொடரவேண்டிய கட்டாய நிலைக்கு கதிர்காமக்கந்தனது திருவிளையாடல் அமைந்துவிட்டது.

ஆம்! சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள் வெள்ளிக்கிழமை சந்நிதியானை வழிபடவருவதற்குமுன் தனது அயல்வீட்டு அம்மையாரை குமாரசாமி ஐயர் அவர்கள் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அந்த அம்மையார் வழமைபோல தான் இந்த வருடமும் கதிர்காம யாத்திரை செல்வதுபற்றி குமாரசாமி ஐயர் அவர்களுடன் உரையாடி உள்ளார்கள். முருக பக்தனான குமாரசாமி ஐயர் அவர்கள் தனது காணிக்கையாக கற்பூரம் முதலிய பூசைப்பொருட்களை வாங்கி அவற்றை கதிர்காமக் கந்தனுக்கு காணிக்கை சேர்ப்பிக்குமாறு அந்த அம்மையாரிடம் வழங்கி உள்ளார்கள்.

அப்பொழுது அந்த அம்மையார் குமாரசாமி ஐயாவிடம் நீங்களும் கதிர்காம யாத்திரை மேற்கொள்ளலாம் தானே என்று கூறியுள்ளார்கள். அதற்கு குமாரசாமி ஐயர் அவர்கள் "இன்னமும் அந்தக் கதிர்காமக்கந்தன் என்னை அழைக்கவில்லை அவன் அழைத்தால் அழைக்கின்ற பொழுது வருகிறேன்" என்று பதில் கூறியிருந் தார்கள்.

உண்மையில் 60 வயதைத் தாண்டிவிட்ட நிலையில் இனிமேல் கதிர்காம யாத்திரைக்கு எப்படிச்செல்வது. இதுவரை காலமும் செல்லவில்லை. இனிமேல் அதற்கான வாய்ப்பு எங்கே கிடைக்கப்போகிறது என்ற சிந்தனையில்தான் குமாரசாமி ஐயர் "அவன் அழைத்தால் அங்கே வருகிறேன்" என்று அந்த அம்மையாருக்குக் கூறினார்கள். கதிர்காமக் கந்தன்மீது ஆழமான பக்தி குமாரசாமி ஐயருக்கு இருந்த நிலையிலும் இதுவரை காலமும் தான் போகமுடியாத ஆதங்கத்தினாலும்தான் அவன் அழைத்தால் நான் வருவேன் என்று கூறிய கூற்று உண்மையில் அவர் மேலோட்டமாகக் கூறிய ஒரு கூற்றாகும். ஆனால் கதிர்காமக்கந்தன் அற்புதக் கந்தனல்லவா குமாரசாமி ஐயர் 'அழைத்தால் வருவேன்' என்று கூறிய அன்றே ஆச்சிரமத்தின் சுவாமியூடாக

நாங்கள் கதிர்காமத்திற்குச் செல்கின்றோம் நீங்களும் வருகின்றீர்களா? என்ற அழைப்பை கதிர்காமக்கந்தன் விடுத்தபொழுதுதான் குமாரசாமி ஐயர் கதிரமலைக் கந்தனது திரு விளையாடலை உணர்ந்து கொண்டார்கள். இவ்வாறு கதிர்காமக்கந்தனது அழைப்பை ஏற்றுச்சென்ற குமாரசாமி ஐயர் அவர்கள் அங்கே கதிர்காமக்கந்தன் கோயில் கொண்டிருக் கின்ற அழகையும், எழிலையும் கண்குளிரக்கண்டு ஆனந்தப் பரவசமடைந்தார்கள். கதிரமலை உச்சியில் நெய்விளக்கு ஏற்றி அங்கே இடம்பெற்ற அந்த விஷேட பிரார்த் தனையில் பங்குபற்றியமை போன்ற அனைத்துச்செயற்பாடுகளினூடாகவும் ஆனந்தப் பரவசமடைந்தார்கள்.

அதுமட்டுமல்ல கதிர்காமத்தில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தாரையும் சந்திக்கும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது. அதன் சேவைமூலம் சிவத்திரு குமாரசாமி ஐயர் கதிர்காமக்கந்தனது புகழ்பற்றி சொற்பொழிவாற்றியவுடன் பேட்டியும் வழங்கியதோடு முருகப்பெருமானது பாடல்கள் பலவற்றைப் பாடுவதற்கும் அதனைப் பல்லாயிரக்கணக் கானவர்கள் பார்ப்பதற்கும் வாய்ப்புக்கிடைத்தது.

ஓம் முருகா!.

## வாசகர்களுக்கு
## மலர் சம்பந்தமான அறிவுறுத்தல்

2008ஆம் ஆண்டு ஞானச்சுடர் மலர் மட்டுப்படுத்தப்படவுள்ளதால் கடந்த மலரில் எம்மால் வைக்கப்பட்டிருந்த அஞ்சல் உறைமூலம் 2008ஆம் ஆண்டு மலர் பெறவிரும்புவோர் தங்களது ஒப்புதலையும் சரியான தபால் முகவரியினையும் எழுதி கடித உறையினை அனுப்பவும்.

## புதிய ஆண்டில் புதிய அம்சங்களுடன்
## ஞானச்சுடர்

- இது வாரியார் பக்கம்
- தமிழக திருக்கோயில் வரிசை

**இன்னும் பல விசேட ஆக்கங்களுடன் மாதந்தோறும் வெளிவரும்.**

உ

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

04-01-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம்:- மங்கள இசை
வழங்குபவர்கள்:- T.M. வாசகர் குழுவினர்

---

11-01-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம்:- பண்ணிசை
வழங்குபவர்:-திரு சி. தில்லைமணி (ஆதீன ஓதுவார்.மின்சாரசபை ஊழியர்)
(பக்கவாத்திய சகிதம்)

---

18-01-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம்:- பெரியபுராணம் (தொடர்)
வழங்குபவர்:- அ. குமாரவேல் ஆசிரியர் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

25-01-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## தை- 2008

வெளியீட்டுரை :- செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்
மதிப்பீட்டுரை :- ஆ. சிவநாதன் (அதிபர்)

பதிவு இல. Q.D/44/NEWS/2007

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2007

**ஜனவரி**
01.01.2007 மார்கழி 17 திங்கள்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
02.01.2007 மார்கழி 19 புதன்
திருவாதிரை விஷேட உற்சவம்
15.01.2007 தை 1 திங்கள்
தைப்பொங்கல்
27.01.2007 தை 13 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**பெப்ரவரி**
01.02.2007 தை 18 வியாழன்
தைப்பூசம் விசேட உற்சவம்
16.02.2007 மாசி 4 வெள்ளி
மகாசிவராத்திரி விசேட உற்சவம்
23.02.2007 மாசி 11 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மார்ச்**
05.03.2007 மாசி 19 சனி
மாசிமகம்
21.03.2007 பங்குனி 7 புதன்
ஆலய கும்பாபிஷேகதினம்
சகஸ்ரமகா சங்காபிஷேகம்
சண்முக அர்ச்சனை, விசேட உற்சவம்
23.03.2007 பங்குனி 9 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**ஏப்ரல்**
01.04.2007 பங்குனி 18 ஞாயிறு
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேகதினம்
14.04.2007 சித்திரை 1 சனி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
(சர்வஜித்து) மாலை விசேட உற்சவம்
19.04.2007 சித்திரை 8 வியாழன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மே**
02.05.2007 சித்திரை 19 புதன்
சித்திரா பூரணை விரதம்
12.05.2007 சித்திரை 29 சனி
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
காலை 10 மணி சங்காபிஷேகம்
காலை 11 மணி சண்முகார்ச்சனை
மதியம் 12 மணி விசேட உற்சவம்
15.05.2007 வைகாசி 2 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.05.2007 வைகாசி 18 புதன்
வைகாசி விசாகம் விசேட உற்சவம்

**ஜூன்**
13.06.2007 வைகாசி 30 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.06.2007 ஆனி 5 வெள்ளி
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
25.06.2007 ஆனி 11 திங்கள்
தீர்த்தமெடுப்பு

**ஜூலை**
02.07.2007 ஆனி 18 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
10.07.2007 ஆனி 26 செவ்வாய்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
15.07.2007 ஆனி 31 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூசை

**ஆகஸ்ட்**
06.08.2007 ஆடி 21 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
12.08.2007 ஆடி 27 ஞாயிறு
ஆடிஅமாவாசை விரதம்
13.08.2007 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
கொடியேற்றம் அதிகாலை 5.30
16.08.2007 ஆடி 31 வியாழன்
காலைத்திருவிழா ஆரம்பம்
21.08.2007 ஆவணி 4 செவ்வாய்
பூங்காவனம்
22.08.2007 ஆவணி 5 புதன்
கைலாய வாகனம்
26.08.2007 ஆவணி 9 ஞாயிறு
சப்பறம்
27.08.2007 ஆவணி 10 திங்கள்
காலை தேர்
28.08.2007 ஆவணி 11 செவ்வாய்
காலை தீர்த்தம்
மாலை மௌனத் திருவிழா

**செப்ரெம்பர்**
03.09.2007 ஆவணி 17 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.09.2007 புரட்டாதி 13 ஞாயிறு
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**அக்டோபர்**
11.10.2007 புரட்டாதி 24 வியாழன்
நவராத்திரி விரதாரம்பம்
20.10.2007 ஐப்பசி 3 சனி
சரஸ்வதி பூஜை
21.10.2007 ஐப்பசி 4 ஞாயிறு
விஜயதசமி
கேதாரகௌரி விரதாரம்பம்
27.10.2007 ஐப்பசி 10 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**நவம்பர்**
06.11.2007 ஐப்பசி 22 வியாழன்
தீபாவளி
09.11.2007 ஐப்பசி 23 வெள்ளி
கேதாரகௌரி விரதம்
10.11.2007 ஐப்பசி 24 சனி
கந்தசஷ்டி விரதாரம்பம்
15.11.2007 ஐப்பசி 29 வியாழன்
கந்தசஷ்டி சூரன்போர்
16.11.2007 ஐப்பசி 30 வெள்ளி பாரணை
தெய்வானை அம்மன் திருக்கல்யாணம்
24.11.2007 கார்த்திகை 8 சனி
திருக்கார்த்திகை விரதம்
விசேட உற்சவம் குமாராலய தீபம்
25.11.2007 கார்த்திகை 9 ஞாயிறு
விநாயக விரதாரம்பம்
விஷ்ணு ஆலய தீபம்

**டிசம்பர்**
15.12.2007 கார்த்திகை 29 சனி
விநாயகர் சஷ்டி விரதம்
திருவெம்பாவை பூஜாரம்பம்
16.12.2007 கார்த்திகை 30 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை
21.12.2007 மார்கழி 5 வெள்ளி
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
24.12.2007 மார்கழி 8 திங்கள்
திருவாதிரை விசேட உற்சவம்

**சுபமங்களம்**
**நன்றி**